Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம் ★ தமிழன் பிரஸ், ஈரோடு.

குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம் ★ நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 14-2-1948 சனிக்கிழமை { மலர் 23.

கொஞ்சம் கசப்புதான்!

(தோழர் வி. எஸ். நடேசன்)

★

எத்தனை நாளைக்கிந்த கஷ்டந்தான் (எ) மெட்டு.

ஈரோட்டு மருந்து கொஞ்சம் கசப்புதான் நமது
இழிவு நீங்க வேண்டுமென்றால் வேணும் கொஞ்சம் சகிப்புதான் (ஈ)

(1) வேரோடு பார்ப்பனீய விஷப்பூழுக்களை மாய்த்திடும்
வெகு காலப்பழக்க வழக்க வேற்றுமைகளைச் சாய்த்திடும்
ஆருடம் ஜோசிய மென்னும் அறியாமையைத் தீய்த்திடும்
அஞ்சாமல் வாங்கிப்புசித்தால் அரிய நன்மை வாய்ந்திடும் (ஈ)

(2) தொல்லைதரும் ஜாதிபேதம் துளியுமே தலைக்காட்டாது
தொழிலாளத் தோழரைப்பசித் துயரமினிமேல் வாட்டாது
கல்லைக்காட்டிக் காசைப்பறிக்கும் கயமை இருக்கமாட்டாது
காமாந்த காரக்கடவுள் கதைகள் வாலை நீட்டாது (ஈ)

(3) கல்லடிக்கும் பயப்படாமல் காய்ச்சி டுத்த லேகியம்
காரம்சற்றும் குறையவில்லை கால கள் பலவாகியும்
உள்ளபடி நல்லதெனவே உண பான் எந்த யூகியும்
உழைப்பாளர் வாங்கித்தின்றால் உண்டாகும் பெரும்பாக்கியம் (ஈ)

(4) வடநாட்டுச்சுரண்டல் முறையை வரவொட்டாது தடுத்திடும்
வறுமையினால் வாடுவோர்க்கு வாழ்க்கையில் நலங்கொடுத்திடும்
விடமாட்டோம் பழமையைஎனும் வீணரைச்சரிப்படுத்திடும்
விஞ்ஞான உலகில்நம்மை விரைவினில் கொண்டு விடுத்திடும் (ஈ)

(5) வைதீகப் பித்தமோடு வர்ணாஸ்ரம வாதமும்
வாழ்வை நம்பாதேஎனும் வகையற்ற போதமும்
தெய்வீகம் சிவன்செயலெனும் திருட்டு வேதாந்தமும்
தீர்வதுடன் ஒழிந்துபோகும் உயர்வு தாழ்வு பேதமும் (ஈ)

(6) இந்தியர் நாமல்லவென்ற எண்ணமதை ஊட்டியது
ஏமாற்றி நமையடக்கிய எதிரிகளை வாட்டியது
முன்தீவினை தலையெழுத்தெனும் மூடத்தனத்தை யோட்டியது
முழக்கமது திராவிடர்க்கே திராவிடம் எனக்காட்டியது (ஈ)

சிறுவர் விடுதலை!

(மூ. சோ. அகம்பன்)

★

பல்லாயிரம் ஆண்டுகளாய்ப் பெண்கள் அடிமையாயிருந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பெண்கள் நிலைமையே அப்படியானால் அவர்கள் பெற்று வளர்க்கும் குழந்தைகள் நிலைமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? குடிசைகளிலும், சாக்கடையோரங்களிலும், சந்திகளிலும், வீட்டுத் திண்ணைகளிலும், திறந்த வெளிகளிலும் அநாதையாய்க் கிடந்துழலும் ஏழைக் குழந்தைகளின் நிலைமையைப் பற்றிச் சிந்திக்கும்போது அம்மம்மா! உள்ளம் துடிக்கின்றது. உடல் நடுங்குகின்றது. தகப்பன் காலடிச் சத்தம் கேட்கும் போது முகம் வாடும் குழந்தைகளை-பெற்றோர் அழைத்தால் விழுந்தடித்துப் பயந்தோடும் குழந்தைகளை-வறுமையால் வதங்கும் குழந்தைகளை — விபசாரத்தில் பிறந்த சூதறியாக் குழந்தைகளை-பெற்றோர் காணும்போது அந்தோ! என் உள்ளம் உருகுகின்றது. பதறுகின்றது; பதைபதைக்கின்றது.

நமக்குள்ள உரிமைகள் எல்லாம், குழந்தைகளுக்குமுண்டு; அவர்களும் மனித சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என எண்ணி நாம் கண்ணியமாக நடத்த வேண்டும். அன்பாக கருணையாகப் பாராட்டி சீராட்டி வளர்க்க வேண்டும். இதுவே குழந்தைகளைப் பற்றிய எனது கருத்து.

பிள்ளை வளர்ப்பு முறை.

உன் குழந்தை ஒரு பொய் சொன்னால், உலகமே பாழாகிப் போவதாக எண்ணி, அதன்மேல் சீறி விழாதே! குழந்தைகளிடம் நேர்மையாக நட! மூர்க்கக் குணமுடைய தந்தைக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பொய்யர்களாகவே இருப்பார்கள். இது இயற்கை விதி! மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுண்மையை அறிந்திருக்க வேண்டும். குழந்தைகள் ஏன் பொய் சொல்லுகின்றன? பெற்றோர் கொடுமைக்குப் பயந்தே மன வலிமையற்ற குழந்தைகள் பொய் சொல்லப் புகுகின்றன. குழந்தைகளை திட்டினால், அடித்தால் அவை பொய் சொல்லத்தான் செய்யும்.

தந்தை அடிக்க வரும்போது தந்திரமாகப் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ளும் அளவுக்கு, குழந்தைகளுக்கு மூளையைக் கொடுத்த இயற்கையை நான் பாராட்டுகிறேன்.

உன் குழந்தைகள் பொய்சொன்னாலும் நீ அவர்களிடம் உண்மையைத்தான் சொல்ல வேண்டும். பலமுறை நீயும் நூற்றுக்கணக்கான பொய் சொல்லியிருப்பதாக அவர்களிடம் கூசாமல் சொல்லு. அவ்வாறு பொய் சொல்வது, நற்பழக்கமல்லவென்று அவர்களிடம் சாந்தமாகக் கூறு.

உன்னைவிடப் பலசாலியான ஒருவன் அதட்டிக் கேட்டால் நீ எப்பொழுதும் உண்மை பேசுவாயா? மாட்டவே மாட்டாய். பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ளத்தான் பார்ப்பாய். ஆகவே சிறு குழந்தைகள் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயல்வதைப் பற்றி ஆச்சரியப்பட முடியுமா? தரகு வர்த்தகம் செய்பவன் பொய் சொல்லும் தன் மகனைத் தண்டிப்பது நீதியா? பொய்யும் புரட்டும் தொழிலாக உடைய வக்கீல்கள்—உண்மை கூறாத மக்களை அடிப்பது மானக்கேடல்லவா? புராணப் புழுகுகளை, பொய்களை மூட்டை மூட்டையாய்ப் பிரதிதினமும் அவிழ்க்கும் புரோகிதர்கள், குருக்கள் பொய் சொல்லும் குழந்தைகளை நையப் புடைப்பது பொருத்தமாகுமா?

உன் குழந்தை தப்புச் செய்தால் அடியாதே! மாறாக வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்து முத்தமிடு! சீராட்டு! பாராட்டு! உன் உள்ளன்பைக் குழந்தை உணரும்படி செய்! இதுவே குழந்தைகளைத் திருத்தும் வழி! எனினும் சிறு குழந்தைகள் தப்புச் செய்தால்—பொய் சொன்னால்—பல நல்ல பெற்றோர்கள் குழந்தைகளை விரட்டியடித்து வீட்டை விட்டு வெளியேற்றுகிறார்கள். இது எவ்வளவு மூடத்தனம்! கொடுமை! அநியாயம்!

இவ்வண்ணமாகக் குழந்தைகளை அடித்தோட்டிய பெற்றோர்கள், "கடவுளே! நீயே அக்குழந்தையைக் காப்பாற்று" என்றும் வேண்டிக் கொள்கிறார்கள். என் குழந்தைகளை நானே காப்பாற்றாமல், கடவுளிடம் அந்தப் பாரத்தை—பொறுப்பை நான் ஒரு பொழுதும் ஒப்புவிக்கவேமாட்டேன்.

நான் என் குழந்தைகளிடம் என்ன சொல்லுவேன் தெரியுமா?

"பிரியமுள்ள இடத்துக்குப் போங்கள்; தாராளமாகக் குற்றம் செய்யுங்கள்; பொய் சொல்லுங்கள்; நீங்கள் எவ்வளவுகேடு கெட்டுப் போனாலும் சரி, நான் உங்களைவெறுக்கமாட்டேன்; அடிக்க மாட்டேன்; வீட்டை விட்டு ஓட்ட மாட்டேன்; உயிருள்ள வரை நான் உங்களை நேசித்துக் கொண்டே இருப்பேன்" என்று தான் சொல்லுவேன்.

"அடி செய்யும் உதவி அண்ணன் தம்பி செய்யான்" என்ற பழமொழியில் எனக்கு நம்பிக்கையே இல்லை. உன் குழந்தையை நீ அடிக்கும் போது ஒரு போட்டோ பிடித்துப் பார்! கோபத்தால் உன் முகம் கோணி விகாரமாயிருப்பதையும், குழந்தை ஏங்கி அழுவதையும், குழிந்த கண்களிலிருந்து கண்ணீர் வடிவதையும் நீ பார்ப்பாய்! அந்தப் படத்தைப்பார்த்து நீ கண்ணீர் வடிப்பாயா? ஆனந்தப் படுவாயா? இரக்கமுள்ளவனாயிருந்தால் கண்ணீர் வடிக்கத்தானே செய்வாய்!

குழந்தைகளை அடிக்கவே கூடாது! அது சுத்தத்தப்பு! அடித்து வளர்ப்பது அழகே அல்ல! நேர்மையுமல்ல! குடும்பம் ஆனந்தமயமாக இருக்கவேண்டும்! எல்லோரும் சரி நிகர் சமானமாக ஒழுக வேண்டும்!

என்று அறிஞர் இங்கர்சால்சொன்னார். குழந்தைகளிடம் அன்பு காட்டு! குழந்தைகளுக்குச் சுதந்தரம் கொடு! குழந்தைகளை வீட்டை விட்டு விரட்டாதே! வீட்டில் இருக்க அவர்களுக்கு உரிமையுண்டு! சுதந்தரமுண்டு! இருந்துதான் ஆகவேண்டும்! அவர்கள் இஷ்டப்படி விளையாடட்டும்! "தரையில் பந்தை உருட்டு! துணிமேல் பந்தை உருட்டாதே! கதாகாலக்ஷேபத்துக்குப் போ! நாடகத்துக்குப் போகாதே! கோயிலுக்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம்!

பெரியார் ஈ. வெ. ராமசாமி, அனைத்திந்திய காங்கரஸ் காரியக் கமிட்டிக்கும் பண்டிட் நேரு, ராஜகோபாலாச்சாரியார், பட்டேல், ராஜேந்திரப் பிரசாத், ஜயப்பிரகாஷ் நாராயணன், ஆகியோருக்கும் காந்தியாரின் முடிவு சம்பந்தமாய் அவருக்கு ஞாபகக் குறிப்பு ஏற்படுத்துவதைப் பற்றி அடியிற்கண்டபடி தன்னுடைய ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார்:—

காந்தியாருக்கு ஞாபகச்சின்னம் ஏற்படுத்துவது அவசியம். அது நிரந்தரமானதாகவும், அதிசயமான பயனுள்ளதாகவும் இருக்கவேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை:

1. இந்தியாவுக்கு ஹிந்துஸ்தான் என்கிற பெயருக்குப் பதிலாக காந்தி தேசம் அல்லது காந்தீஸ்தான் என்று பெயரிடப்படலாம்.

2. இந்து மதம் என்பதற்குப் பதிலாக காந்தி மதம் அல்லது காந்தினிசம் என்பதாக மாற்றப்படலாம்.

3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக மெய்ஞ்ஞானிகள் அல்லது சத்ஞானஜன் என்று பெயர் மாற்றப்படலாம்.

4. காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள்தான் உண்டு. வர்ணாஸ்ரம தர்ம முறை அநுசரிக்கப்படமாட்டாது. ஞானமும் (அறிவும்) பக்ஷமும் (அன்பும்) அடிப்படையாகக்கொண்டது. சத்து அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிருஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாக காந்தி ஆண்டு என்று துவக்கலாம்.

இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான் காந்தியார், புத்தர் கிருஸ்து, மகம்மது முதலிய பெரியார்களுக்கு ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்குத் தோன்றிய ஓர் சீர்திருத்த மகான் ஆகவும் உலகமே கருதும்படியான நிலை ஏற்படும். உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப்படுவோம். இந்தியாவுக்கு சாபக்கேடு என்று எது எது சொல்லி வரப்பட்டதோ அதெல்லாம் மறைந்துவிடும். ஆர்ய சமாஜ், சீக் சமாஜ், பிரம்ம சமாஜ், என்பது முதலிய எத்தனையோ புதிய மார்க்கங்கள் (கொள்கைகள்) ஏற்பட்டும் ஒன்றும் இந்தியாவை வெற்றி கொள்ளவில்லை. ஆனால் பௌத்த மதம், கிறிஸ்து மதம், முகம்மதிய மதம் ஆகியவை வெற்றி பெற்றுவிட்டன. இதன் காரணம் இவை அரசாங்க மதங்களாய் இருந்து வருவதேயாகும். ஹிந்துஸ்தான் முப்பது கோடிக்கு மேற்கொண்ட மக்களைக் கொண்டது. அதன் அரசியல் திட்டமாக காந்தீயம் ஏற்பட்டு விடுமானால் கண்டிப்பாக வெற்றிபெற்றே தீரும். இன்றைய முட்டாள் தனமும் மூர்க்கத்தனமும் ஆன கொலை பாதக பேயாட்டங்கள் இனி நடைபெற முடியாமலும் போகும்.

பெயர் மாறுதல்கள் காரணமாய் மதங்களுக்கும் தேசங்களுக்கும் கொள்கை பெயர் மாற்றங்கள் ஏற்படுவது சகஜமாகவே இருந்து வந்திருக்கிறது. உதாரணமாக புத்தர், அசோகர் காலத்தில் ஏற்பட்ட மதக்கோட்பாடு மாறுதல்களும் ரஷியா, ஸயாம் முதலிய நாடுகளுக்கு ஏற்பட்ட சோவியத் லேண்ட், தாய் லேண்ட் போன்ற பேர்களும் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். மற்றபடியாக சிறு ஊர்களுக்குப் பெயர் மாற்றுவதும் பெருந் தொகையாக பணம் வசூல் செய்து அதன் மூலம் சில பொதுநலக்காரியங்கள் செய்வதும் காந்தியாருக்கு நாம் ஏதோ நன்றி காட்டினதாகத் தான் வந்து முடியுமே தவிர காந்தியாரால் உலகத்துக்கு நம் நாட்டுக்கு அதாவது மற்ற நாட்டாரால் தாழ்மையாகக் கருதப்பட்ட சரித்திரப் பிரசித்தமுள்ள நாட்டுக்கு ஏற்பட்ட மகா மேன்மையான காரியம் என்னவென்பதற்கு நல்ல ஆதாரம் இல்லாமல் போய்விடுகிறது. ஒருவரை மகான், க்ரெட் மேன்—Great Man—என்றால் அவரால் ஏற்பட்ட நிரந்தரமான பெரிய காரியம் ஒன்று இருந்தாகவேண்டுமேயொழிய அவர் காலத்தில் இன்னின்ன காரியம், அற்புதம், அதிசயம் நடந்தன என்பவை பிற்கால மக்களுக்கு பயன்படுவதானதாக ஆகிவிடாது. இது எனது தாழ்மையான அபிப்பிராயம். கொள்ளவும், தள்ளவும், திருத்தவும், மாற்றவும் உங்களுக்குப் பூரண உரிமை உண்டு.

இதற்கு இது ஒரு நல்ல சமயம். நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்தியாவின் ஒரு பாகமாகிய சிந்துவுக்கு இன்று பாகிஸ்தான் என்ற பெயர் ஏற்பட்டிருப்பதுபோல் இந்தியாவின் பெயரும் மாற்றப்படலாம். இந்து என்பதும் இந்தியா என்பதும் அந்நியர்கள் நமக்கும் நம்நாட்டிற்கும் கொடுத்த பெயர். (அதுவும் சிந்துநதி காரணமாக ஏற்பட்டபெயர்) என்பதை எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். காந்தியாரும் இதைச் சம்பத்தில் சொல்லியிருக்கிறார். இந்து மதம் என்பதாக ஒரு மதமும் இல்லை. ஆகவே இந்தப்படியான மாற்றம் காந்தியார் உயிர்ப் பலியின் காரணமாக ஏற்பட்டுவிடுமானால் இனி இங்கு மத சமுதாய ஜாதி சம்பந்தமாக எந்தப் பிரச்னையும் சுலபத்தில் காணமுடியாது. 30 கோடி மக்களும் ஞானவான்களாக ஒரே சமுதாய மக்களாக உலகத்தின் முன்திகழ்வார்கள்.

சென்னை, 9—2—48. ஈ. வெ. ராமசாமி.

பெரியார் என்ன சொல்லுகிறார்? யார் சொன்னதைச் சொல்லுகிறார்?

(கைவல்யம்)

✶

பெரியார் அவர்களைப் புகழ்ந்து அவர் பெருமைகளை எழுதவேண்டுமென்பது எனது எண்ணம். ஒருவர் இறந்து போன பின் அவருக்குப் புகழ் கூறுவதுமுண்டு. அது எனக்கு நியாயத்தில் அமையக்கூடாதது. ஏனென்றால் அவருக்கு இரண்டு வயதிற்கு மூத்தவன் நான். என் மரணத்திற்குப் பின்புதான் அவர் மரணமடைய வேண்டும். பெரியாரின் பெருமைகளைப்பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். பின் நானேன் எழுதுகிறேன்? எனது ஆசை. நாற்பது ஐம்பது வருடத்தைப்போன்ற எங்கள் காலமன்று உங்கள் காலம். படிப்பதிகம், மறைந்து கிடந்ததெல்லாம் உங்கள் முன்னால் பெரியாரால் நிறுத்தப்பட்டிருக்கிறது. பூட்டிக் கிடந்த பகுத்தறிவின் பூட்டு திறந்து விடப்பட்டிருக்கிறது. தேசத்திலும், சமயத்திலும் பொறுப்புகளை வகிக்கும், இயற்கையுரிமைகளில்லாத இகழ்ச்சியின் துன்பங்கள் உங்கள் நெஞ்சைத் தின்னுகின்றன. உயிரற்ற சமாதானமென்ற அறைக்குள், மனிதன் எக்காலத்திலும் திருப்தியுடன் அடைபட்டிருக்கமாட்டான். அபிவிருத்திக்குப் பாடுபடுதல், அவனுடைய அத்யந்த அவசரம். தான் துன்பப்பட்டும் ஒரு கொள்கையைத் தூக்கி நிறுத்துதல் அதன் அடையாளம். இதுவே எல்லாப் பெரிய தேசத்தாரின் சரித்திரமுமாகும்.

பெரியாரை உள்ளது உள்ளபடியே புகழ்கிறேன். அவைகள் அவருக்குப் பொருந்துகிறதா? என்பதை ஆலோசித்துப்பாருங்கள். ஒரு கொள்கையையோ, ஏற்பாட்டையோ உண்டு பண்ணி அதைச் சனசமூகத்தினிடம் பரப்பினவர்களை, ரிஷிகளென்றும், மகான்களென்றும், அவதாரமென்றும், அம்மன் முலைப்பாலையுண்டவரென்றும், கடவுள் அழகிலிருந்து பிறந்தவரென்றும் சொல்லுகிறார்கள். இதில் சிலர் தங்கள் கொள்கைகளைத் தங்களினத்திற்கு அனுகூலமாக மாற்றித் திருத்தி ஏமாற்றும் காரியத்தைச் செய்தார்கள். அதற்குப்பின் அவ்வழி வந்தவர்கள் அவர்கள் ஏற்பாட்டிற்கு அனுகூலமாக, அவர்கள் தெய்வலோகத்திற்குப் போய் வந்தார்களென்றும், தெய்வம் அவர்கள்கூடப் பேசுமென்றும், வரமும் சாபமும் கொடுத்தார்களென்றும், பல பொய்க் கதைகளை எழுதி, அவர்கள் கொள்கையோடு சேர்த்து, அந்தக் கொள்கையினைச் சாஸ்திரமென்றார்கள். இவைகளெல்லாம் சுயமரியாதைச் சங்கத்திற்கு உடன்பாடல்லாததினால், ஈ. வெ. ரா. பெரியாரை நாம் கடவுள் அருள்பெற்றவரென்றோ, அவதாரமென்றோ சொல்லுவதில்லை. அவர் அறிவின் ஆற்றலும், புத்தியின் விசாலயூகமும், தங்கள் சமூகத்தின் இழிவைப் போக்கவேண்டி உழைக்கும் ஓயா உழைப்பும், வாதப்பிரதிவாத நியாயங்களும், அதற்குத்தகுந்த பேச்சும் எழுத்தும் அவரைப் பெரியாராக்கியிருக்கிறது. தோழர்கள் சி. இராஜகோபாலாச்சாரியார், எஸ். சீனிவாச அய்யங்கார் ஆகியோர் நமது நாட்டு அறிவாளிகளில் முதன்மையானவர்களென்று பெயர் பெற்றவர்கள். அவர்களால் பெரியார் மதிக்கப்பட்டவர். பேச்சாளிகளில் முதலில் நிற்பவர் ஈரோட்டுப் பெரியார் என்று கல்கிப் பத்திரிகையும் எழுதி விட்டது.

இவர் கடைவீதியில் ஒரு வியாபாரியாகவிருக்கையில், தீராத கணக்கு, சிக்கலான கணக்கு, பித்தலாட்டக் கணக்கு இவைகளையெல்லாம் ஒரு தரம் பார்த்த மாத்திரத்தில் ஒழுங்குபடுத்தி, பஞ்சாயத்தையும் முடித்து விடுவார். இவர் சிறுவயதாயிருக்கையில் வடநாட்டுப் பட்டாளம் ஈரோட்டு வழியே போயிற்று. ரயில்வேஸ்டேசனில்வண்டி நின்றது. சிப்பாய்கள்ஸ்டேசனிலிறங்கி சனங்களுக்கும், கடைக்காரர்களுக்கும் தொந்தரவு கொடுத்தார்கள். அங்கு தன் வேலையாகப் போயிருந்த பெரியார் அதைத்தடுத்தார். மூன்று நான்கு சிப்பாய்கள் அவரை வண்டிக்குள் இழுத்துக் கொண்டார்கள். தனியாக உள்ளே அகப்பட்டுக்கொண்ட அவர், அந்தச் சிப்பாய்களைக் குத்தித்தள்ளித் திமிறி வெளியே வந்து விட்டார். பின் கூட்டம் சேர்ந்தது, போலீசும் வந்தது, வண்டியும் போய் விட்டது. மனோதைரியத்திற்கு ஏற்றபடி, தேக பலமுமுடையவர். அந்தத்தைரியமே, கல்லெறிக்கும் தடியடிக்கும் பயப்படாமல் அவர் பிரசாரத்தையும், பிரசங்கத்தையும் நிறைவேற்றி வந்திருக்கிறது. பாரதியார் அங்கே உட்கார்ந்திருந்தார், இங்கே எழுந்து நின்றார், பம்பரமாடினார், பாட்டுப்பாடினார் என்பதுபோல வர்ணிப்பதானால் பெரியாரைப்பற்றி அனேகம் சொல்லலாம். பெரியார் வாலிபராயிருக்கையில் பல சமயம் அவர்கூட இருந்திருக்கிறேன். அதுபோலப், பாரதியார் நாற்பது வருடத்திற்குமுன், மையிலாப்பூர் குட்வீன் கம்பெனி கோவிந்தராஜப் பிள்ளையின் ஆதரவிலிருந்த சமயம், நானும் மையிலாப்பூரிலிருந்தேன். பல நாள் ஒன்று இரண்டு மணி நேரம் அவர்கூட இருந்திருக்கிறேன். அந்தக் காலத்தில் ஒரு பார்ப்பாராவது, பாரதியாரை யார் என்று கூட விசாரித்ததில்லை. பாரதியார் ஒரு தேசீய வாதி என்றும், தமிழ்ப் படிப்புள்ளவரென்றும், தெரிந்த கோவிந்தராஜுப் பிள்ளையும் டாக்டர் நஞ்சுண்டராவும் (மராட்டியர்) ஆதரித்தார்கள்.

பெரியாரின் சிறு வயது நிற்கட்டும். பெரியார் என்ன சொல்லுகிறார்? யார் சொன்னதைச் சொல்லுகிறார்? எப்படிச் சொல்லுகிறார்? என்பனவற்றை விவரித்து உங்களுக்குச் சொல்லுகிறேன். தெரியாதவர்கள் கவனித்துப் படித்துத் தெரிந்து வையுங்கள். அவர் நமக்கு மட்டும் பெரியாரல்ல; நமது நாட்டுக்கும் சனங்களுக்கும் பெரியாராய் என்றும் விளங்குவார். அது எப்படி? என்பதையும் சொல்லுகிறேன்.

பெரியார் நாத்தீகத்தைச் சொல்லுகிறார், அதைப் பரப்புகிறார் என்று சொல்லுகிறார்கள். அவர் பேரில் சுமத்தும் பெரிய குற்றமும் அதுதான். ஆத்தீகமென்பது கடவுள் உண்டென்பது. நாத்தீகமென்பது கடவுள் இல்லையென்பது. கடவுள் என்றால் என்ன? அது இன்ன தன்மையையுடையது; இன்ன தன்மையையுடையதாயிருக்கும், இருக்கலாம், இருக்க முடியாது, என்கின்ற தத்துவவாதத்தில் ஆத்தீக நாத்தீகமிருக்கும். இரண்டு பேர்களின் புத்தியும் ஒன்றாகவே சஞ்சரித்ததுதான். விசாரணையில் இரண்டு பேர்களின் அறிவும் சமம்தான். நாத்தீகன் அறிவு தடைப்படுமிடத்தில் நின்று, பின்னும் ஆலோசிக்கிறான். ஆத்தீகன் அறிவு தடைப்பட்ட இடத்தில் தடைப்பட்டு, எண்ணத்தில் தோன்றியபடி கற்பனையில், யூகத்தில், பழய ஏட்டில் அவரவர்களுக்குத் தோன்றியபடி சொல்லுகிறான். வேதம் அனாதி, கடவுள்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

மது வெறியினும் கொடியது மதவெறி!

தாராவியில் தமிழர் நிலை!

★

பம்பாயின் ஒரு பகுதி தாராவி என்றதும் அங்கு 7 அடுக்கு, 8 அடுக்கு மெத்தைக்கட்டிடங்கள்ஏராளமாக இருக்கும்; ட்ராம்களும்,மோட்டார்களும் போனவண்ணம்வந்த வண்ணமாகவே இருக்கும் என்றெல்லாம் பிரமாதமாக நினைத்து விடாதீர்கள்! நானும் ரயிலில் போகும் போது அப்படியெல்லாம் நினைத்துக் கொண்டுதான் சென்றேன். ஆனால் தாராவிக்குள் காலடி வைத்ததும் நான் நமது ஊரில் ஏதோ ஒரு சந்துப் புறத்தில் இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றியது. எங்கு பார்த்தாலும் குப்பை, கூளம்—தேங்கிக் கிடக்கும் குட்டைகள்—டிச்சும், ரோட்டும் வேறுபாடில்லாமல் ஒற்றுமையாய் ஒன்று கூடி வாழும் காட்சி—என்றைக்கு யார் தலையில் விழுகலாமென்று எண்ணிக் கொண்டு காலந்தள்ளும் பழங்கால வீடுகள்! இவைகள்தான் தாராவி என்னும் பகுதிக்குச் சிறப்புத் தருவனவாக விளங்குகிறது. தாய்நாடு விட்டு ஆயிரம் மைலுக்கு அப்பால் வந்தும் நம்மவர்கள் வாழ்க்கை அங்கு போலவேதானா இங்கும் இருக்க வேண்டும்? இந்த வாழ்க்கை நடத்த இவ்வளவு தூரம் வருவானேன்? என்பன போன்ற கேள்விகள் எழாமலிருக்க முடியாது. என்றைக்குத் திராவிட நாட்டைத் தனிக் குடி அரசாக அமைத்து அயல்நாடு சென்றுள்ள நம்மவர்களையெல்லாம் "வாருங்கள்! (அகதிகளாக அல்ல) நம் நாட்டுக்கு நல்வாழ்வு வாழ" என்று அழைப்பது எனஎண்ணாமலிருக்க முடியாது.

இவ்வாறெல்லாம் பல பல நினைத்துக் கொண்டே தோழர் எஸ். பெரியசாமி அவர்கள் வீட்டில் தோழர்கள் பலருடன் சிற்றுண்டி அருந்தி விட்டு எனக்குத் தங்கியிருப்பதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பம்பாய்தோல் வியாபாரிகள் சங்கக் கட்டிடத்துக்குச் சென்றேன். போகும் வழிகளில் பல் சங்கங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட போர்டுகள் பலவற்றைக் கண்டேன். ஏதோ வாழுகிற இடம் வேதனை தரத்தக்க முறையில் இருந்தாலும், வாழுகிற மக்களின் உள்ளத்தில் வருங்கால வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகள் பல இருக்கின்றன வென்ற மகிழ்ச்சி உண்டாயிற்று.

இரண்டு ராத்திரி தூக்கம் கெட்டுப்போயிருக்கிறோமே தங்குகிற இடத்தில் போய் நன்கு தூங்கலாம் என்ற எண்ணத்துடனேயே சென்றேன். ஆனால் எனது எண்ணம் ஈடேறவில்லை. வழியில் பார்த்த தோழர்கள் பலர் நெடுநாள் பழகிய நண்பர்கள் போன்று அன்புடன் வந்து தாய்நாட்டின் நிலைபற்றியும், நமது

இயக்க வேலை பற்றியும், பெரியார் அவர்களின் சுகக்ஷேமங்களைப் பற்றியும் விசாரித்தவண்ணமாகவே இருந்தார்கள். அவர்களது அன்பையும், இயக்கத்தின்பால் கொண்டுள்ள அக்கரையையும் கண்ட போது எனது அலுப்பு போன இடம் தெரியவில்லை. அவர்களுடன் பேசிக்கொண்டிருப்பதிலேயே பொழுது போனதே தெரியவில்லை. மத்தியான விருந்து திராவிட நாடு பகுத்தறிவு நிலையச் செயலாளர் தோழர் எஸ். சுப்பய்யா வீட்டில்.

அது முடிந்து நான் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்துசேர்ந்தேன். அப்பொழுதுபேசிக்கொண்டிருந்த தோழர்களிலே ஒருவர் (பெயர் ஞாபகம் வரவில்லை) "உங்களுக்கு ஒரு சங்கதி தெரியுமா?" என்றார். என்ன வென்று கேட்ட பொழுது "இன்று நீங்கள் பேசப் போகும் விழாவிற்குத் தலைமை வகிக்கப் போகிறவர் பிராமணர்!" என்றார். ஒரு சமயம் என்னிடம் இந்தச் சேதி சொன்ன தோழர் நான் அதையறிந்தால் "அப்படியானால் அதில் நான் கலந்து கொள்ள மாட்டேன்" என்று சொல்லுவேன் என எதிர்பார்த்திருக்கக் கூடுமோ? என்னமோ? அது எப்படியிருந்த போதிலும் நான் உடனே "அப்படியானால் ரொம்ப நல்லதாய்ப் போச்சு. ஒரு பார்ப்பனரே பார்ப்பனீயத்தைக் கண்டித்துப் பேசும் விழாவிற்குத் தலைமை வகிக்கிறார் என்றால் நமக்கு ரொம்ப லாபந்தானே?" என்றேன். "நான் ஒன்றும் அதைத் தப்பு என்று சொல்லவில்லை. ஊருக்குள் சிலபேர் பார்ப்பான் ஆகாது ஆகாது என்று பேசுகிற இவர்கள் எப்படி பார்ப்பான் தலைமையில் விழா நடத்தலாம்?" என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காகச் சொன்னேன்" என்று நாசூக்காக நழுவினாற் போலவும் எதிர்பார்த்த பதில் கிடைக்காமல் ஏமாந்தவர் போலவும் பேசினார். உடனே நான் "தாங்கள் சொல்லியது தவறு அல்ல. ரொம்ப நல்லது. ஊருக்குள் சிலபேர் நாம் பார்ப்பனர்களைத் திட்டுகிறோம்; கூடாது என்கிறோம் என்று பேசுகிறார்களே அவர்களுக்குப் புரியும்படியாக விளக்கிச் சொல்ல வேண்டியது நமது கடமையே தவிர அவர்கள் மீது குற்றமில்லை. இன்று நடைபெறவிருக்கும் விழா முடிந்த பின்னராவது நாம் வெறுப்பது பார்ப்பனீயத்தையே தவிர பார்ப்பனரை அல்ல என்பது தெளிவாகும் என்று நம்புகிறேன். அதிலும் பார்ப்பனீயத்தை நாம் மட்டும் குறைகூறவில்லை; கண்டிக்கவில்லை. பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த ஒருவரே ஆதரித்து முடிவுரை கூறுவாரேயானால் ரொம்பப் பலனளிக்கும். தாங்கள், ஊர் மக்கள் மனப்பான்மையை முன் கூட்டி விளக்கிச் சொன்னதற்கு எனது நன்றி" என்று சொல்லி முடித்துவிட்டு வேறு பல சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அவைகளில் ரொம்ப முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது என்னவென்றால் நம் தமிழர்கள் ஆயிரக்கணக்கில்

மத வெறிக்குப்பலியானோர் மண்ணிலநேகர்.

★ கலப்பு மணம். ★

(சி. சங்கரலிங்கம்)

★

'உடலால் இருவர், உள்ளத்தால் ஒருவர்; வீணையும்,நாதமும் நாமிருவர்; நகமும் சதையும் நாமிருவர்; பூவும் மணமும் நாமிருவர்'—வர்ணிப்பவர்கள் கவிகளல்லவே. காதலர் இருவர். கருத்தொருமித்த வாலிபர்கள்—இவர்கள் படும்பாடு அல்லல், இது ஓர் புறம்.

'சந்திர சூரியர் போங்கதி மாறினும் வீழினும் நமக்கென்ன!'-அம்பிகாபதி.

'இதற்குள்ளா என்னை விட்டுப் பிரிகின்றீர்கள்'-புவிச்சக்கரவர்த்தி மகள், மின்னல் இடை, பின்னல் சடை, கன்னல் மொழியாள், அமராவதி.

'அந்தத் தூக்கமும்-சாந்தியும் நானாயிருந்தால்............!' ஒரு ஏக்கம் பெருமூச்சு அம்பிகாபதிக்கு.

'சூரிய குலத்திலுதித்த நான் இனி உயிர்வாழேன்'—மன்னன் பிதற்றுகின்றான் பித்தன்போல், மணமக்களது வாக்கு, போக்கு, நோக்கு கண்டு. மணக்கோலத்தில் காணவேண்டிய மணமக்கள் பிணக்கோலத்தில் காணப்படுகின்றனர். மந்த மதியினனான மன்னனது சொந்தவாளே மணமகனின் ஹிருதயத்தை ஊடுருவுகின்றது. அந்தோ! துக்கம், துக்கம். இது பிறிதோரிடம்.

இவ்வாறு தித்திக்கும் செங்கரும்பாக வேண்டிய காதலர்களது வாழ்வு வேம்பாகின்றது. கலப்பு மணம் என்றாலே ஒரு பீதி; மன மருட்சி. காரணம்! திராவிடம் எடுப்பார் கைப்பாவை ஆகிவிட்டது. தேய்ந்து வருகின்றது திராவிடம். ஆரிய ஆணவம் ஆட்டி வைக்கின்றது நம்மை. மேல் ஜாதி, கீழ் ஜாதி இங்கு. ஜாதிக்குள் உட்ஜாதி. எவனெவன் இந்த 'வர்ணாஸ்ரமத்தைப் போற்றுகின்றானோ அவன் அறிஞன்; எவனெவன் இப்பேதத்தைத் தூற்றுகின்றானோ அவன் மடையன், கடையன், நாத்தீகன், கருத்தழிந்தவனுங்கூடத் தான்.

நம் நாடு ஓர் விசித்திர நாடு. ஆடும் மயில் குளிரால் வாடுகின்றதென நினைத்து, தன்சால்வையை எடுத்துக் கொடுப்பான் அதன் பாழும் குளிரடங்க—இவன் ஓர் அரசன்!

ஒரு முல்லைக் கொடிக்குப் படர் கொழு கொம்புக்குத் தன் தேரையே விட்டு விட்டு நடந்து செல்வான்—இவன் ஓர் மன்னன்!!

ஒரு புறாவுக்காகத் தன் தசைகளை அரிந்து கொடுப்பான். இவன் ஓர் சக்கரவர்த்தி!!! இப்பேர்ப்பட்ட மடமைக் கருத்துக்களுக்கு இடமுண்டு இங்கு. ஆனால், பகுத்தறிவுக் கண் கொண்டு எதனையும் ஆராயார் மக்கள். இவர்கள் இருக்கட்டும் ஒரு புறம் விழியிருந்தும் வழி தெரியாத ஏமாளிகள்.

அண்மையில் தோன்றியது அமெரிக்க, ரஷ்ய வரலாறுகள். 18ம் நூற்றாண்டுக்குப் பின்னர்த் தான் அமெரிக்கர்களுக்கு வரலாறு எல்லாம். நம்மை இதுகாறும் ஆண்டுவரும் ஆங்கிலேயர்களுக்குக் கிறிஸ்து பிறப்பதற்கு முன் வரலாறு இல்லை. ஆனால், நம் திராவிடவரலாறு பழமையானது, தொன்மையானது. கடாரம் வென்றான் தமிழன்; ஈழம் வென்றான் தமிழன்; அசோகனுக்கும், அக்பருக்கும் தாள் பணியாது தனித்து நின்று வாழ்வு நடாத்தினான் தமிழன். தமிழனின் பொற்காலம் அது. ஜாதிசமயமற்ற காலம் எல்லோரும் ஒன்று, ஒருவனே தேவன்—என்ற கொள்கை. வஞ்சி நாட்டு நங்கை கானகத்தில் நிற்பாள். யானை பிளிறும். சப்தம்கேட்டு நங்கை பதறுவாள். தற்செயலாய்க் கானகத்தில் நின்ற தலைவன் தலைவிக்கு அபயம் கொடுப்பான். வீரம் காதலுக்குக் கட்டுப்படும். திருமணம்! இவ்வாறு திருமணங்கள் நடந்தேறின. சங்க இலக்கியங்கள், அக நானூறு, புறநானூறு, தக்கஉற்ற சான்றுகள் இதற்கு. ஆனால், எங்கிருந்தோ கிளம்பிய ஆரிய நச்சரவு நம்மை ஆட்டி வைத்து வர்ணாஸ்ரம முறைக்குக் கொண்டு வந்து விட்டது. ஜாதி என்றாலே பீதி.

இந்த நிலைமை இன்னும் வேண்டுமா? தடுக்க வகையில்லையா? அடுக்குமா இந்த அனாச்சாரம்?—கேட்பது வைக்கம் வீரர் தகைமைசால் அண்ணல் ஈ. வே. ரா. துருக்கியின் மதிதேய்வத்தைத் தடுத்த கமால் பாட்சாபோல், விசித்திர வைதீகர்களை வீதி சிரிக்கச் செய்த சாக்ரட்டீஸ்போல், ஒரு சன்யாட் சென்போல், ஒரு பேகன் போல் ஒரு ரூசோ போல், ஒரு காரல் மார்க்ஸ் போல், ஒரு ஸ்டாலின் போல் ஏ! திராவிடா! நேர் நின்று நிலைமையைப் பாரடா! ஜாதி ஒழிப்புத் தேவையடா! கலப்பு மணம் தேவையடா! என்று. செவியில் ஏறுமா செந்தமிழ்ச் செல்வர்களுக்கு?! செவி சாய்ப்பார்களா கற்றுணர்ந்த வல்லுணர்கள்!! செயலில் இறங்குவார்களா சீர்திருத்தச் செம்மல்கள்!!!

கலப்பு மணம்—இன்று நமது 'பரந்த' அனுபவத்தில் ஒரு பொடி விஷயமாய் விட்டது. முன் நாடு ஆண்டான் வெள்ளையன். குற்றம் சார்ந்தது அவனை. ஆனால் இன்று! 'நாம் யார்க்கும் குடி யல்லோம்''—கீதம் பாடியாய் விட்டது. 'வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசு'—முரசு கொட்டியாய் விட்டது. 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே—பள்ளுப் பாடி ஆடி ஆகிவிட்டது. இச்சமயம் கலப்பு மணம் நாட்டை நலமாக்க, வளமாக்க நிச்சயம் அவசியம் தேவை என நினைந்து திட்டமியற்றிச் சட்டம் செய்வாரோ பாராளும் ஓமந்தூரார்?!

கலப்பு மணத்திற்குத்தடை ஆரியம். அதற்கு உடந்தை மனு, நம்மைஆளும் கடவுளால் இயற்றப்பட்டது என்று, சொல்லப்பட்ட சட்டநூல். ஒரு சூத்திரன் பிராமணப்பெண்ணை மணந்தால் கண்டிப்பாய் அவனது சொத்தில் பங்குண்டு. அதேபோது ஒரு பார்ப்பான் ஒரு சூத்திர மாதை மணந்தால் சொத்துரிமை இல்லை வாரிசுக்கு. இன்னும் பிற, பாகுபாடுள்ள சட்டங்கள். ஒருவனுக்கு ஒரு நீதி. மற்றொருவனுக்கு ஒரு நீதி. இந்த மனு நம் திராவிட நாட்டில் இருக்கும்வரை நமக்கு வாழ்வேது? இம்மனுவை எதிர்த்தால் அல்லாடிகள் எதிர்ப்பர். எனவே, இம்மனு இம்மண்ணைவிட்டு நீங்க ''வளமார் எமது திராவிடம் எமது, எமது'' என்று முரசறைந்து

வாழ்ந்து வரும் அப்பிரதேசத்தில் சாதாரண ஒரு ஆரம்பக் கல்விப் பாடசாலைகூட சௌகரியமான முறையில் இல்லை என்பதாகும். ஏதோ ஒப்புக்கு நடத்தவேண்டுமே என்ற கட்டாயத்திற்காக மிக அசௌகரியமான கட்டிடத்தில் பட்டியில் ஆடுகளை அடைத்து வைக்கும் மாதிரியில்தான் ஒரே ஒரு பாடசாலை பம்பாய்க் கார்ப்பொரேஷனால் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த தமிழ்நாட்டில் எத்தனையோ காரியங்களுக்கு உயர்ஜாதிக்காரர்களுக்குப் பயன்படத்தக்க முறையில் எவ்வளவோ பெரிய பெரிய தொகைகளை அள்ளிக் கொடுக்கும் ''வள்ளல்கள்'' உண்மையிலேயே யாருக்கு உதவவேண்டுமோ அவர்களுக்கு அனுகூலமான ஏற்பாட்டைச் செய்வதன் மூலம் பேரும், புகழும் பெற்று வாழ விரும்பினால் தாராவியில் ஒரு உயர்தரப் பாடசாலை நிறுவலாம். அப்படிச் செய்ய யாராவது ஒருவருக்காவது மனம் வராதா? என்று எதிர்பார்க்கிறார்கள் தாராவித் தமிழர்கள் என்பதை, அவர்கள் சார்பாக நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இனித் திராவிடநாடு பகுத்தறிவு நிலைய நான்காவது ஆண்டுவிழாவைப் பற்றிச் சொல்லுகிறேன்.

(அடுத்த வாரம்)

பெண்கள் பகுதி:

சிந்தியுங்கள் !

(தோழியர் கமலம்)

பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையவேண்டுமானால் பெண்களுக்கு ஆண்களின் உதவி தேவை. பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையவேண்டுமென்று விரும்பும் ஆண்கள் பலர் உண்டு. ஆனால் அவர்கள் இல்லத்திலுள்ள பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து விட்டார்களா?

பெண்களுக்குத்தான் அடிமை வாழ்வு வாழ விருப்பமா? அவர்கள் உரிமையைக் கேட்க அவர்களுக்குத் தைரியம் போதவில்லை. அதற்கு அடிமைத்தனமே காரணம். நம் இயக்கத் தோழர்கள் புராண இதிகாசங்களை நம்பா விட்டாலும் அவர்கள் வீட்டிலுள்ள பெண்கள் நம்பாதிருக்கிறார்களா? தீபாவளி முதலிய பண்டிகைகள் கொண்டாடாதிருக்கிறார்களா? இதற்குக் காரணம்? உண்மையை உணரவில்லை. படிக்கவோ உரிமை இல்லை. பகுத்தறிவைப் பயன்படுத்த அடிமை வாழ்வு தடை.

நம் திராவிடப் பெண்கள் கோயில்களுக்குச் செல்லாதிருந்தால் ஆரியத்தின் நிலை என்னாகும்? இன்று ஆரியப்புரட்டை அழிக்க முடியாத அஸ்திவாரங்களாக இருப்பது பெண்களல்லவா? நாளுக்கு நாள் அறியாமை வளர்ந்து கொண்டே போகிறது. ஆனால் திராவிடப் பெண்களுக்கு அறிவு இல்லை என்று கூற முடியுமா? சில விஷயங்களில் அறிவோடு நடந்து கொள்ளும் போது, மூட நம்பிக்கைகளிடத்து அறியாமைகாணப்படுவதின் காரணம் பழக்க வழக்கங்களேயாகும். இந்த மூடநம்பிக்கை என்ற அறியாமை அழிந்து போகும் காலம் என்றுதான் வரப்போகிறதோ தெரியவில்லை. உண்மையை விளக்கிக் கூறினால் சமூகம் தூற்றுமே என்று அஞ்சித் தன் அடிமைத்தனத்தை நீக்க எந்தப் பெண்ணும் முன்வரவில்லை. பெண்களை நம் இயக்கக் கூட்டங்களுக்கு அழைத்துச் சென்றால் அங்கு எடுத்துக் கூறும் விஷயங்களை அறிந்து கொண்டபின் விதியை நம்புவார்களா? புராண இதிகாசங்களை நம்புவார்களா? பண்டிகைகளைக் கொண்டாடுவார்களா? கோயில்களுக்குச் செல்வார்களா? பசி பிணி என்று பிடிசாதம் கெஞ்சிக்கேட்கும் பாட்டாளி மக்களுக்கு இல்லை என்று சொல்லி, மதக்குறி போடும் சோம்பேறி கட்டுப் பஞ்ச காலத்தில் படிக்கணக்காய் அரிசியைக் கொடுப்பார்களா? மனோதிடத்துடன் உரிமையுடன் வாழவும் பகுத்தறிவுப் பாதையை நோக்கிச் செல்லவும் ஆண்கள் பெண்களுக்கு வழி காட்ட வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் எதையும் ஆராய்ந்து பார்க்கிறார்களா? ஆராய்ந்து பார்க்க அவகாசமேது? ஆராய்ந்து பார்த்தால் பகுத்தறிவுப் பாதையை நோக்கிச் செல்பவரைத் தூற்றுவார்களா? ஆராய்ந்து பார்க்க ஓய்வு கொடுங்கள். பகுத்தறிவைப் பயன்படுத்த விடுதலை அளியுங்கள். பெண்கள் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிய விரும்புவது போல் அடிமைத்தனத்தை விலக்கவும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கும் விரும்பிப் போராடினால் விரைவில் வெற்றி அடைவது திண்ணம். திராவிடநாடு திராவிடருக்கே என்று முழங்கும் படையில் பெண்கள் படை முன்னின்றுபணி செய்யத் தோழியர்களே புறப்படுங்கள், வெற்றி நமதே!

திராவிட அரசு அமைக்க நம் ஒப்புயர்வற்ற அண்ணல் பெரியார் ஈ. வெ. ராமசாமி காட்டும் பகுத்தறிவுப்பாதை நடந்து இன்பத்திராவிடத்தைத் அடைந்து, நாடு நலனுற, வளமுற, கேடு நீங்க ஜாதி ஒழிந்து, கலப்புமணம் மலிய, ஆரிய ஆணவம் அடியோடு வீழ வேண்டும். அன்றே நமக்கு வாழ்விலோர் திருநாள்! நன்னாள்!! அந்நாள்—என்னாள்?!!!

ரப்பர் ஆடைகள்.

(நிக்கோலஸ் வெண்ட்)

ரப்பர் கலந்த ஆடைகளை நாம் அணிந்து கொள்ளப் போகும் நாள் வெகுதூரத்திலில்லை யென்று நான் கூறினால் அது உங்களுக்கு வியப்பாகத்தானிருக்கும். ஆனால் விஞ்ஞானம் முன்னேற்றமடைந்து வரும் இக்காலத்தில் அதைக் கேட்டு நாம் வியப்புற வேண்டியதில்லை; ஏனெனில் நாம் அணிந்துள்ள ஆடைகளில் ரப்பர் சேர்ந்துள்ளதென்பதைக் கண்களால் பார்க்கவோ அல்லது உணரவோ முடியாது.

துணிகளின் ஆயுட் காலத்தை நீட்டிப்பதற்காக நெசவுத் தொழிலில் ரப்பரை பயன்படுத்துவது இயலுமெனச் சமீபத்தில் பிரிட்டனிலுள்ள கம்பனி ஆராய்ச்சி நிலையத்தின் ரசாயன சாலைகளில் வளர்ச்சியடைந்துள்ளஒரு புதுமுறை விளக்கியுள்ளது. இப்புரட்சிகரமான முறைப்படி ரப்பர், அணுக்களாகப் பிரிக்கப்பட்டு இழைகளுடன் சேர்க்கப்படுகின்றன. நூலில் எவ்விதம் சாயம் கலந்துகொள்கிறதோ, அதேபோல் ரப்பர் அணுக்களும் இழைகளுடன் ஒன்றாய்ச் சேர்ந்து விடுகின்றன. ஆகவே இந்த ரப்பர் அணுக்களை நாம் கண்களால் பார்க்கமுடியாது. ஆடைகளில் ரப்பர் கலந்துள்ளதென்பதை நாம் உணரவும் முடியாது. காற்று உட்புகுவதை இந்த ரப்பர் அணுக்கள் தடைசெய்வதில்லை. இவ்விதம் ரப்பரை நெசவுத் தொழிலில் உபயோகிப்பதென்பது அதற்குள்ள நீர்ச்சுவறாத குணத்திற்காக அல்ல. உண்மையில் இம்முறைப்படி இழைகளுடன் சேர்க்கப்படும் ரப்பர் அணுக்களுக்கு இக்குணமே இல்லை.

மழைக்காலங்களில் நாம் உபயோகப்படுத்தும் ரப்பர் கோட்டுகள் மிகச் சொர சொரப்பாகவும், முரடாகவுமிருக்கின்றன. ரப்பர் கலந்த ஆடைகளும் இவ்விதமாகத்தானிருக்குமோ வென நீங்கள் அய்யம் கொள்ளலாம். ஆனால் ரப்பர் அணுக்கள் கலந்த ஆடைகள் அதற்கு மாறாக மிகவும் இலேசாகவும், மென்மையாகவுமிருக்கின்றன. இழைகளுக்கு வழவழப்பையும், உறுதியையும் அளிப்பதற்காக ரப்பரை அணுக்களாகப்பிரித்து அவைகளுடன் சேர்ப்பதே இம் முறையின் முக்கிய நோக்கம். இம் முறைப்படி நெசவுத்தொழிலில் ரப்பரைப் பயன்படுத்துவதால் இழைகளுக்கு அழிவு உண்டாவதில்லை. அத்துடன் அவைகள் நீண்ட நாட்கள் நீடித்துழைக்கின்றன!

முதந்தையர் ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும் !
பெருமை முயற்சி தரும்.

—திருவள்ளுவர்.

குடி அரசு

14—2—48 சனிக்கிழமை.

காந்தியார் முடிவிற்குப் பின்.

★

மதவெறிகொண்ட மாபாதகக் கூட்டம் சதிச்செயல் புரிந்து, தந்திரமும் வஞ்சனையும் போர்த்து உலகப்பெரியாருள் ஒருவரான பெரியார் காந்தியாரைப் பலிகொண்டுவிட்டது; செய்தியைக் கேட்டுத் திகைத்தவர் பலர்; திகைப்பால் செத்தவர்கள் சிலர்; சாக விரும்பியவர்கள் சிலர் என்ற செய்திகளை யெல்லாம் அவர் மறைந்ததிலிருந்து நாள்தோறும் கேட்டு வந்திருக்கின்றோம். மனிதத் தன்மை படைத்த எவருமே விரும்பாத, இழிவான இந்தப் படுகொலையைக்கண்டு, கேட்டு எவருமே பதறாமல் இருக்கமுடியாது. கோட்ஸே கும்பல்கூட அல்ல; கோட்ஸேகூட மனம் பதறித்தான் இருப்பான்; தன்னால் கொல்லப்பட்ட காந்தியார் குலைந்து மண்ணில் வீழ்ந்ததைக்கண்டு. ஏன்? அவனும் மனித உடல் போர்த்தவன்தானே.

சுயநலம் கொஞ்சமும் இல்லாமல், தனது முப்பது ஆண்டு வாழ்க்கையையும் இந்தியத் துணைக்கண்டத்து மக்களின் நன்மைக்காகவே, தன் மனதில் எது நன்மை என்றுபட்டதோ அவ்வழியிலேயே உழைத்த பெரியார் காந்தியார். பலாத்கார முறைகளில் கொஞ்சமும் நம்பிக்கையில்லாமல் அஹிம்சையையே தன் கருவியாகக் கொண்டவர். மத இயலில், மதத்திற்கு மதம் வேறுபாடில்லை என்றும், மத முடிவுகள் எல்லாம் ஒன்றுதான் என்றும் வற்புறுத்தியவர். கடவுள் இயலில், கடவுள் ஒன்றுதான் என்றும், அந்த ஒன்றைத்தான் பலரும் பலவாறு கூறிப் போனார்கள் என்றும், ஆனால் எல்லாவற்றையும் ஒன்றாகவேதான் நான் மதிக்கின்றேன் என்றும், விளக்கிக்கூறி கடவுள் வழிபாட்டிற்காக அமைந்த கோவில்களை விபசார விடுதிகள் என்று கூறி அங்கு தரகனோ, அந்தக் கடவுளுக்குப் பால் பழம் சோறோ வேண்டியதில்லை; திறந்த வெளியே போதும் என்றவர். அதாவது விக்கிரக ஆராதனை கூடாது, பிரார்த்தனையே போதும் என்று வற்புறுத்தியவர். சமுதாய இயலில் ஒருவரை ஒருவர் சுரண்டுதல் கூடாது, பரம்பரையாக ஒருவர் உறிஞ்சிப் பிழைக்கவும் அதற்காக மற்றொருவர் நைந்து வாழ்க்கை கசந்து வாழவும், அதற்காக ஒரு கூட்டம் ஒடுக்கப்பட்டவர்களாய்த் தாழ்த்தப்பட்டவர்களாய் இருந்து வருவது ஈனம் என்றும் வற்புறுத்தியவர். தேச இயலில் இந்தியத் துணைக்கண்டத்தை ஒரே நாடு என்றும் இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நாட்டினர் என்றும் வற்புறுத்தியவர்.

இவ்வாறான காந்தியாருடைய பல கொள்கைகள், மத வேறுபாடு ஜாதி வேறுபாடு நிரம்பிய இந்த நாட்டிற்கு அவைகளைத் தீர்க்க ஓரளவிற்குப் போதுமானவைகள் என்று கூறத் தகுந்ததாயினும், அக்கொள்கைகளைப் பரப்புவதற்கு அவர் கையாண்டுவந்த முறைகள் நிச்சயமாக விபரீதமான பலனைத்தான் கொடுக்குமென நாம் அடிக்கடி வற்புறுத்தி விளக்கிக்கூறி வந்திருக்கின்றோம் என்பதையும், அதே நேரத்தில் அவரின் பல கொள்கைகள் இந்தப் பிற்போக்கான நாட்டிற்குத் தேவையானவை என்று உணரத் தவறவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.

இவ்வாறு இந்தியத் துணைக்கண்டத்தின் நன்மைக்காக, பெருமைக்காக, முன்னேற்றத்திற்காக உழைத்து வந்த பெரியார் காந்தியார் என்று சொல்லிக்கொள்ளத் தகுந்த நிலையிலிருந்தாலும், அவருடைய மறைவுக்குப் பிறகும் இந்த நாட்டில் வாழ்ந்தேயாகவேண்டிய மக்கள் எவ்வளவு தூரம் நன்மை, பெருமை, முற்போக்கு அடைந்திருக்கிறோம்? அடையாவிட்டால் அதற்குக் காரணம் என்ன? அடைவதற்கு நாம் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும்? என்பவைகளைப்பற்றி எண்ண வேண்டுமல்லவா? அவைகளை யடைந்தால்தானே உண்மையில் காந்தியாரின் கொள்கைகள் நிறைவேறியதாக, வெற்றி பெற்றதாக நாமும் சொல்லிக்கொள்ளமுடியும்; உலகமும் ஒப்புக்கொள்ளும். இந்த நாட்டின் பிற்போக்குச் சக்திகள் என்று காந்தியார் எவற்றைக் குறிப்பிட்டாரோ, அவற்றை யொழிப்பதுதானே உண்மையாக அவரை மரியாதை செய்வதாக இருக்க முடியும். இதைத் தேசியத் திராவிடர்கள் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள, தேசியப் பல்வேறு இனங்களும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.

காந்தியாரை எந்த இந்துமதம் ஒழித்ததோ, அதாவது எந்த இந்து மதம் காந்தியார் உயிருடன் வாழ்வது தான் அழிந்துபோவதற்கு ஏது என்று கருதியதோ, அந்த இந்துமதத்தின் வளர்ச்சிக்காகவா அவருடைய மறைவுபயன்படுத்தப்படவேண்டும்? தான் பெரிய ஜாதியாய் இருந்துகொண்டே மற்ற ஜாதியெல்லாம் தனக்குக் கீழ்ப்பட்ட ஜாதியென்று சொல்லி அவைகளைத் தலைநிமிரவொட்டாமல் தந்திரத்தாலும், வஞ்சகத்தாலும் சதிசெயல்புரிந்து, சாஸ்திரம் என்றும் சடங்கென்றும் கூறி ஏமாற்றி வாழ்ந்துவரும் எத்தர்கள் பிழைப்புக்கு ஆகவா, இந்தப் பெரியாருடைய மறைவு பயன்படுத்தப்படவேண்டும்? அறிவற்ற மக்களின் மூடத்தனத்தைப் பெருக்கி, அவர்கள் அந்த மூடத்தனத்தில் இருந்து என்றும்மீளாத வழியாக, பார்ப்பனீயத்தின் காலைக் கழுவிக் குடித்து வாழும் சாதியாக என்றைக்கும் இருப்பதற்காகவா இந்தப் பெரியாரின் வஞ்சகமான படுகொலையை மறைத்து, வேறு வகையில் ஆடம்பரமாக அநாவசியமாகப் பயன்படுத்தப்படவேண்டும்?

பெரியாருக்குத் தந்தி!

★

[காந்தியாரின் ஞாபகச்சின்னம் அமைப்பதைக் குறித்துப் பெரியார் அவர்கள் வெளியிட்ட ஆலோசனையைப் பாராட்டித் தஞ்சை மாவட்டக் காங்கரஸ் செயலாளர் அனுப்பியிருக்கும் தந்திச்செய்தி இது.]

நாகப்பட்டினம் 11—2—48

ஈ. வெ. ராமசாமி, ஈரோடு.

காந்திஜியைக் குறித்து நேருவுக்குத் தாங்கள் அனுப்பியுள்ள உயரிய யோசனையை நாங்கள் பாராட்டுகிறோம். முதலில் நாம் ஒன்றுபடுவோமாக!

—ராமச்சந்திரன்
காரியதரிசி
தஞ்சை ஜில்லா காங்கரஸ் கமிட்டி.

காந்தியார் முடிவின் பிறகு நாம் நாட்டிலே என்ன பார்க்கின்றோம்? உலகத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் அவரைப் பாராட்டி அவர் முடிவுக்கு வருந்தி, அவரைச்சுட்ட கொலை பாதகப் பார்ப்பனனைக் கண்டித்து ஏராளமான செய்திகள் வெளியாகி விட்டன. ஒருவன் குற்றம் செய்தால் அவனும் அவனைச் சார்ந்த சொந்தக்காரர்களும், அவன் குலத்தினருமேழிக்கப்படவேண்டும் என்ற இந்து மதத்தின் பழங்கால நீதியை, இப் பார்ப்பனன் விஷயத்திலும் கையாளப்படவேண்டும் என்று நாம் கூறவில்லை; விரும்பவுமில்லை; அது நியாயமுமில்லை. ஆனால் அவனையொழித்து விட்டு, அவன், அந்தச் சதி செயலைச்செய்ய எந்த இந்து மத வெறியுணர்ச்சி காரணமாக இருந்ததோ, அந்த இந்துமதச் செழிப்புக்கான காரியங்களைச் செய்வது தான் நீதியா? நியாயமா என்று கேட்க ஆசைப்படுகின்றோம். இந்தப் படுகொலைக்கு எந்த இந்துமத சாம்ராஜ்ஜிய வெறியுணர்ச்சிகாரணமாக இருந்ததோ, அந்த உணர்ச்சியை ஆழக்குழி தோண்டிச் சுட்டுப் பொசுக்கிச் சமாதி வைப்பதல்லவா நீதியான செயலாக இருக்க முடியும் என்று கூறவும் ஆசைப்படுகின்றோம்.

அவர் மறைந்த பதின்மூன்றாம் நாள், அவருடைய சாம்பல்களை எல்லாம் இந்த நாட்டின் "புண்ணிய" நதிகளில் கரைத்து விடப்பட்ட ஒரு சடங்கையும், அதைப் பக்தி விசுவாசமாகப் பலர் பார்த்துத் தரிசித்துச் சென்றனர் என்ற விளம்பரச்செய்திகளையும், அதை அங்கங்கே உள்ளவர்கள் அவை கொண்டு போகப்பட்டபோதும், கரைத்தபோதும் ஏராளமாகக் கண்டு வணங்கிச் சென்றனர் என்ற செய்திகளையும் பார்க்கும் போது நாம் பெரிதும் வருத்தமடைகின்றோம். காந்தியாரின் படுகொலை விளைவித்த வருத்தத்தைக் காட்டிலும், அவருடைய முடிவு இந்தப்படி சித்திரவதைச் செய்யப்படுவது, நமக்குமட்டுமல்ல பகுத்தறிவுடைய எவருக்கும் அதிக வருத்தத்தையே உண்டு பண்ணும் என்னலாம்.

இந்தச் செயலால் மக்களுடைய காலமும் பொருளும் வீணாகக் கழிந்தன என்றுகூட நாம் குறிப்பிட ஆசைப்படவில்லை. ஆனால் விலை மதிக்க முடியாததான மக்களின் அன்புணர்ச்சி—காந்தியார் படுகொலையைக் கேட்டுத் திகைப் படைந்து இதற்கு ஏதாவது வழி செய்யவேண்டும் என்று பிறந்த தெளிவுணர்ச்சி—காந்தியாரிடத்தில் நாம் மரியாதையுடையவர்கள் என்று காட்டவேண்டும் என்று தோன்றிய நன்றியுணர்ச்சி— பரிதாபமான முடிவைக் கேட்டு நம் மீது அதிகமான சுமை ஏற்றப்பட்டிருக்கிறது; சமுதாய முன்னேற்றத்திற்கு நம்மாலான தொண்டைச் செய்தேயாகவேண்டும் என்று உண்டான வீர உணர்ச்சி, "காந்தியார் எலும்பைக் கண்டு தரிசித்தோம்" "ஆற்றில் சாம்பலைக் கரைக்கும்போது அந்த அருமையான காட்சியைக் கண்டு களிப்படைந்தோம்." "இதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு எப்படி எப்படியெல்லாமோ போய் ஏதோ ஒரு மாதிரியாய்ப் பார்த்து வணக்கத்தைச் செலுத்தி விட்டோம்" என்று எண்ணி மனத்திருப்திப்படும் அளவிலா மனதிலுண்டான நல்லுணர்ச்சிகள் எல்லாம் கரைத்து விடப்படவேண்டும் என்று கேட்கிறோம். காந்தியார் எலும்பையே காவிரி நதியிலும், மற்ற நதிகளிலும் கொண்டு போய்க் கலப்பது புண்ணியமென்றால், அந்த நதிகளில் நம் முன்னோர்களின் எலும்பையும், சாம்பலையும் கொண்டு போய்க் கலப்பது தானே நமக்கும் புண்ணியமானதாகும்; இந்த ஏற்பாடுதானே புனிதமானது; என்கிற முடிவைத் தானே இந்தச் செயல் மற்ற மக்களைக் கொள்ளச் செய்யும். அஸ்தியை ஆற்றில் கரைக்க அய்யருடைய உதவி தேவை என்கிற முடிவில், பார்ப்பனர் வகுத்த சாஸ்திரங்களும், அவர்களின் வயிற்றுப் பிழைப்பும் பாராமரிப்பதற்குத்தானே இந்த நடவடிக்கை பயன்படுவதாக இருக்க முடியும்? இந்திய யூனியன் மதமற்றது என்று கூறப்பட்டாலும், அது இந்து மதத்தைப் பின்பற்றியே நடக்கக்கூடியது என்கிற உண்மையைத் தானே அரசாங்கம் காட்டும் ஆதரவிலிருந்து மக்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்க முடியும்.

இதுதானா காந்தியாருக்குச் செய்யும் நன்றி—மரியாதை? இவ்வாறு தரிசிப்பதும், மலர் மாலை சாத்துவதும் ஆன காரியங்களால் அவருடைய கொள்கைகள் நிறைவேறி விட்டன என்று கூற முடியுமா?

இயற்கையை ஏவல் கொண்டு, விரும்பியபடி எல்லாம் ஆட்டிவைக்கும் விஞ்ஞான முறையும் அதன் பயனாய்த் தோன்றிய இயந்திரங்களும், இங்கு இன்றைக்கும் வணக்கத்திற்குரியதாக இருக்கிறதேயன்றி வாழ்வின் நலனுக்காகக் கொள்ளப்பட்டது என்று சொல்ல முடியாத நிலையிலேயே இருக்கின்றோம். அறிவு உயர்ந்தது; அறிவைப் பெருக்குவது கல்வி; கல்வியைத் தருவது ஏடு. அந்த ஏடு வணக்கத்திற்குரியதாகவே இந்த நாட்டில் இருந்து வருகிறது என்று சொல்லலாமே தவிர, அந்த ஏட்டின் பயனைக் கண்டு அறிவு பெருகி வாழவேண்டும் என்ற போக்கைக் காணோமே. எது எது உயர்ந்தது என்று சொல்லப்படுகின்றதோ அதெல்லாம் வணக்கத்திற்குரியது; பூஜைக் குரியது என்கிற மனப்பான்மை இந்த நாட்டில் வேரூன்றி, வாழ்வில் அவைகளை யேற்று நடக்கும் தன்மை இல்லாமல் போனதால்

ரோஜா முத்தையா

தானே, இந்தப் பழம் பெருமை வாய்ந்த நாடு கேடுகெட்ட நாடாக மாறி விட்டது. சாரத்தை விட்டு விட்டுச் சக்கையை ருசி பார்க்கும் நடவடிக்கைதானே பல காலமாக பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. அந்தப் போக்கைத்தானா இப்பொழுதும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்கிறோம்.

பார்ப்பனீய மதமான இந்து மதம் என்கிற கொடிய பாம்பிற்குக் காந்தியார் பாலூற்றி வளர்த்து வந்தார். அப்பாம்பின் கொடுமையைப் பற்றி நாம் அவருக்கு அதிகமாகவே எடுத்துக் கூறினோம். சுயராஜ்ஜியம் என்ற மகுடியை ஊதி வந்ததால், அதுவும் ஆடிப்பாடிக் குதித்ததால், அதைய டக்கித் தன் வழிச் செலுத்தலாம் என்றே காந்தியார் முழுக்க முழுக்க நம்பினார். சுயராஜ்ஜிய மகுடியை ஊதாத நேரத்தில்—ஊதத் தேவையில்லை என்று அவர் கருதிய வேளையில், அப்பாம்பு தன்விஷப் பற்களுக்கு அவரையே இரையாகக் கொண்டு விட்டது. இப்பொழுது அந்தப்பாம்பை என்ன செய்வது என்ற கேள்வி? அதைநாம் நசுக்கி அழித்துவிட வேண்டும் என்றுகூடச் சொல்லவில்லை. அதனுடைய விஷப் பற்களை மட்டும் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இதைத்தான் இங்கு வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகின்றோம். இதற்கு வழியென்ன?

அவருடைய நினைவாகப் பெரும் பொருளை நிதியாகச் சேர்த்துக் கஸ்தூரிபாய் நிதி போலவும், கமலா நேரு நிதி போலவும் சிலபொதுக் காரியங்களுக்குச் செலவு செய்து விட்டால், அது உண்மையாகவே அவருக்குத் தகுந்த ஞாபகார்த்தமாக ஆகிவிடுமா? அவருடைய உருவச் சிலைகளை அங்கங்கே வைத்துப் பூசை நடத்திவருவதினால் அது அவருடைய தொண்டைச் செய்ததாக முடியுமா? காந்தியார் கழகம் என்று பெயர் வைத்து அவர் எழுதியவைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து [காலப் போக்கில் பார்ப்பனீயப் பிடியில்சிக்கி நல்லதை யெல்லாம் சுட்டெரித்துவிட்டு மாற்றித் திருத்தி வைத்துக் கொண்டு] வெறும் வேதாந்த விசாரணையில் ஈடுபட்டால் அது அவருடைய கொள்கைகளைப் பரப்பியதாக ஆகுமா? அவர் எப்படி உண்ணாவிரதமிருந்தாரோ, மவுன விரதமிருந்தாரோ அவைகளை நாங்களும் எங்கள் வாழ்க்கையில் பின்பற்றப் போகின்றோம் என்று சிலபேர் முடிவு கட்டுவதால், அது அவருக்கு உண்மையாகவே நன்றி காட்டியதாக ஆகுமா? அவருடைய நினைவுக்கு அறிகுறியாக போஸ்டல் முத்திரைகளை அச்சிட்டு வெளியிடுவதோ அதைப் போன்ற மற்ற செயல்களைச் செய்வதோ காந்தியாரின் கொள்கைகள் இந்நாட்டில் நிலை பெறுவதற்கு வழி செய்யும் காரியங்களாகுமா? வெறும் பஜனைபாடும் அளவிலும், பால் பழம் பூவைத்து நைவேத்தியம் செய்யும் அளவிலும் நின்றால் அவர் உயர்ந்தவர், ஒரு பெரியார், ஒரு மகாத்மா, ஒரு மகான் என்று பெருமையாகப் பேசிக் கொள்வதற்குப் பேருதவியாக இருக்குமே தவிர, அவரால் இந்த நாட்டிற்கு நிலையான பயனேற்பட வழிசெய்ததாக ஆகுமா? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

பார்ப்பனீயத்தை வளர்ப்பதற்

கொலைகாரப் பார்ப்பனீயமே!
உன் அழிவுகாலம்
நெருங்கி விட்டது!
உன் அகங்கார ஆணவம்
இனிச் செல்லாது!
உன் பொய்க்கும் புனை
சுருட்டுக்கும்
இனி நாட்டில் மதிப்பில்லை!

கென்றே தோன்றி, அதைப் பராமரித்து இப்பொழுது முடிவுப் பாதையில் விரைவாகப் போய்க் கொண்டிருக்கும் இந்து மதமே, இந்த நாட்டின் சிதைவுக்கு மூலகாரணமென்று உணர்ந்து, அதை விட்டொழிப்பதே மனிதன் மனிதனாக வாழ்வதற்குச் செய்யப்பட வேண்டியதென்று விளக்கித், தங்களுக்கும் இந்து மதத்திற்கும் சம்பந்தமில்லை என்பதைக் காட்டத் தங்களைத் திராவிடர்கள் என்று அழைத்துக் கொள்ளும் திராவிடப் பெருமக்களின் தந்தை பெரியாரவர்கள், இந்த நேரத்தில் மிகமிக அருமையான யோசனையை வழங்கியிருக்கின்றார்கள். அதனை ஆச்சாரியார், நேரு, பட்டேல் முதலியவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதை நாம் மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றோம். அதனை ஆழ்ந்து படித்து, அதாவது எழுத்தெண்ணிப் படிப்பது என்று கூறுவார்களே அந்த முறையில் படித்து இந்த மாதிரியான திட்டம் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு—சமுதாய ஒற்றுமைக்கு—நாட்டின் நலத்திற்கு—உலகம் உள்ளவரை உலகத்தில் எங்குமே மறைந்துவிடாதபடி காந்தியாரின் நிலையான அறிகுறியாக இருப்பதற்கு—ஏற்றதுதானா? செய்யப்படவேண்டியதுதானா? என்பதைத் தீரச் சிந்தித்துப் பார்க்கும்படியாக காந்திப் பக்தர்களையும் தேசியத் தலைவர்களையும் தொண்டர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தியத் துணைக்கண்டம் என்று கூறப்படுவதாய், பலவேறு நாடுகள், பலவேறு மதங்கள் என்று பிரிந்து பல வேறு கேடுகளுக்கு உள்ளாகி இருக்கும் இந்தத் துணைக்கண்டம் ஒரே நாட்டினர், ஒரே வகுப்பினர், ஒரே மதத்தினர் என்று கூறத்தக்க நிலையில் பலவேறு முற்போக்குக்களையும் அடைய உண்மையாகவே உங்களுக்கு அக்கரை யிருக்கிறதா? ஆசை யிருக்கிறதா? அந்த நல்ல காரியத்திற்கு மக்களின் அன்புணர்ச்சி—தியாகவுணர்ச்சி—நன்றி உணர்ச்சி வெள்ளத்தைத் திருப்பி விடுவதற்கு வழி வகுத்திடுங்கள்! அதற்குத் துணைசெய்யும் முறையில் காந்தியாரின் ஞாபகச்சின்னம் பயன் படட்டும்! அது நிரந்தரமானதாய் நிலைத்திருக்கட்டும்! அதே நேரத்தில் மிகவும் அற்புதமான நன்மையான பயனை உண்டாக்குவதாகவும் இருக்கட்டும்! என்று பெரியாரவர்கள் விரும்புவதைப் போலவே நாமும் விரும்புகிறோம்.

"ஈரோடுவாசி"

13—2—48ந் தேதி கோவை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் "ஈரோடுவாசி" என்னும் வாரப்பத்திரிகைக்குத் தோழர் பி. ஷண்முகவேலாயுதம் ஆசிரியர் & பிரசுரகர்த்தாவாகவும், தோழர் என். கரிவரதசாமி அவர்கள் அச்சிடுவோராகவும் பதிவு செய்துகொண்டனர். பத்திரிக்கை 1—3—48 தேதி வெளிவரும்.

எதிர்பாருங்கள்!

★

இங்கர்சால் கட்டுரை.

தோழர், அரங்கண்ணல் மொழிபெயர்ப்பு.

ரோஜா முத்தையா

நீதியும் நேர்மையும்.

[மு. ராஜமாணிக்கம்]

★

இன்று நாட்டில் நடந்து வருவது காங்கரஸ் ராம ராஜ்ய ஆட்சி. ராமனது காலத்தில் ஆட்சி எப்படியிருந்தது என்று, எவரும் ராமாயணத்தைப் படிக்காமலேயே, அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது எல்லோருக்கும். இன்றைய ஆட்சிக்கு மக்களிடையே எவ்வளவு எதிர்ப்பும் மனக் கசப்பும் ஏற்பட்டிருக்கிற தென்பதைப் பார்க்கும்போது, அந்த ராமன் காலத்தில் அவனது ஆட்சிக்கு எவ்வளவு எதிர்ப்புத் தோன்றியிருக்கும் என்பது விளங்காமல் போகாது.

நல்ல வார்த்தைகளைக்கூறி நாட்டு மக்களிடம் ஓட்டு வாங்கி மந்திரிகளாக உட்கார்ந்திருப்பவர்கள் செய்து வரும் காரியங்களைப் பார்க்கும்போது, ஹிட்லர் ஆட்சியைவிடக் கீழான ஆட்சி என்றுதான் சொல்ல முடியும். ஹிட்லர், படைதிரட்டி அந்நிய நாடுகளை ஆட்கொள்ளத் தொடங்கிய காரணத்தால் அழிந்து ஒழிந்தான். ஆனால் தன்னாட்டின் மக்களுக்கு நன்மைதான் செய்திருக்கிறான். இல்லாவிடில் அவ்வளவு பெரிய படையையும், விஞ்ஞான சாதனங்களையும், தொழிற்சாலைகளையும் அந்நாட்டில் உண்டாக்கியிருக்கமாட்டான். அவனுடைய ஆட்சியை பாசிச ஆட்சி என்று கூறிவிட்டு, இவர்கள் நம் நாட்டில் நடத்தும்ஆட்சிக்குப்பெயரென்ன? அதைவிடக் கொடுமையான ஆட்சியாகவல்லவோ இருக்கிறது இந்த சுயராஜ்ய ஆட்சி. ஆகையால் இதற்கு ராமராஜ்ய ஆட்சி என்று பெயர் கொடுப்பதே பொருந்தும். ராமராஜ்ய ஆட்சி என்றால் ஹிட்லர் ஆட்சியைவிடக் கொடுமையான ஆட்சி போலும்.

மக்களில் மதியுள்ளவர்கள் தான் மந்திரியாக இருத்தல் வேண்டும் என்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறோம்; தவிர அது தான் முறையுங்கூட. ஆனால் நம்மாகாண மந்திரிகளுக்குச் சாதாரண மக்களுக்குள்ளமதிகூட இல்லைஎன்றுதான் சொல்லவேண்டும், அவர்களின் செயல்களைப் பார்க்கும்போது. எட்டையாபுரத்தில் எட்டணாவுக்கு ஒரு குழந்தை விற்கும் காலத்தில் தான் மணி மண்டபங்கள் திறக்கப்படுகின்றன, மாநாடுகள் கூட்டப்படுகின்றன, இசைக் கச்சேரிகள், விருந்துகள் இன்னும் பலப்பல. சென்னை மாநகரிலே அரை நிர்வாணத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் பாதையின் இரு புறத்திலும் படுத்துக்கிடக்கின்றனர். இந்நிலையில் பத்தாயிரம், துவேஷ மனப்பான்மையுள்ள பஞ்சாபியருக்கு ஆடை தானமும், அன்னதானமும் நடக்கிறது. மந்திரிகள் ஊர்சுற்றிப் பிரச்சாரம் செய்து 'அகதிகளுக்கு ஆடை தாருங்கள்' என்றும் வாங்கிக் கொண்டுபோகிறார்கள்.

வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும் போது, அரசாங்கத்தார், மத்திய அரசாங்க வேலைகளை யெல்லாம் அகதிகளுக்கு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இன்னும் பலப்பல செய்கிறார்கள். விவசாய அகதிகளுக்கு சில இடங்களில் நிலங்களும் ஒதுக்கி வைத்திருக்கிறார்களாம்.

தற்பொழுது அரசாங்கம் கவனித்து வரும் முக்கிய பிரச்சினைகளில் ஆகஸ்டு தியாகிகளை மரியாதை செய்வது, அவர்களின் தினத்தைக் கொண்டாடுவது. இறந்தவர்கள் போக இறவாமலிருப்பவர்களுக்கு நிலம் கொடுப்பது. இறக்கும் வரை ஒரு குறிப்பிட்ட தொகையை 'ரிவார்டா'க் கொடுப்பது. தேசத்திற்காகத் தொண்டு செய்தவர்களாம் அந்தத் தியாகிகள். ஆகஸ்டு மாதத்தில் எதற்காகச் சிறை சென்றிருந்தாலும் சரி அவர்கள் ஆகஸ்டு தியாகிகள். தேசத்திற்காகத் தொண்டு செய்தது என்றால் தண்டவாளத்தைப் பெயர்த்ததும், தபாலாபீசைக் கொழுத்தியதுந்தானா? நான்கு வருட முதல் ஆறு ஆண்டுகள் வரை ராணுவ சேவை செய்தது தேசத்தொண்டாகாதா? அவர்களுக்குந்தான் குடியேற்றத் திட்டம் வகுத்தது அரசாங்கம். ஆனால் நடைமுறையில் இல்லை. எவருக்கும் பயன் படவில்லை அத்திட்டம்.

படித்த ஒருசில மாஜி ராணுவத்தினருக்குத் தற்காலிகமாகச் சில ஆபீஸ்களில் வேலை கொடுத்து, அவர்களையும் வெளியில் தள்ளிக்கொண்டு வருகின்றனர். படிக்காதவர்களுக்கு வீடு கட்டித்தருவதும், நிலம் கொடுப்பதும் என்ற திட்டம் என்றாலும் அது கவனிக்கப்படவேயில்லை. அதற்காக விண்ணப்பம் போட்டு ஏமாந்தவர்களே ஏராளம். மாஜி ராணுவஸ்தர்கள் கேட்கும் நிலம் ஆற்றின் ஓரத்திலோ, குளத்தின் பக்கத்திலோ இருக்கக்கூடாதாம். அதுவுமன்றி அதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபனை இருக்கக்கூடாதாம். அப்படிப்பட்ட அரசாங்கத்தின் நிலத்தைத்தான் கேட்க வேண்டுமாம். அப்படிப்பட்ட நிலந்தான் மானியமாகத் கொடுக்கப்படுமாம். அரசாங்கத்தின் இந்த விதமான சட்டம் எல்லோருக்குமல்ல. யாருக்கு என்று நினைக்கிறதோ அவர்களுக்குத்தான்.

ஆகஸ்டு தியாகிகளுக்கு ஆளுக்கு அய்ந்து ஏக்கர் நிலம் கொடுப்பதாக அரசாங்கம் அறிக்கை விட்டது. ஆனால் கொடுப்பது அய்ந்து ஏக்கர் அல்ல. அய்ம்பது முதல் நூற்றைம்பது ஏக்கர் வரை கொடுக்கப்படுகிறது. யுத்த காலத்தில் உணவு நெருக்கடியின் காரணமாக, உணவுப்பொருளை அதிகப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் திட்டப்படி, அங்கங்கே தரிசாகக் கிடந்த புறம்போக்கு நிலங்களைப் பக்கத்துக் கிராம மக்கள் ரத்த வியர்வை சிந்தி விளையும் நிலமாக மாற்றியமைத்தனர். அவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த நிலமெல்லாம் கொஞ்ச காலத்திற்கு முன் மாசூல் இருக்கும்போதே பறிமுதல் செய்யப்பட்டன. அதிலிருந்த விளைபொருள்களெல்லாம் அரசாங்கத்தின் ஆணைப்படி அழிக்கப்பட்டன. அவர்களால் சாகுபடி செய்ய முடியாத நிலங்களும் ஏராளம். அந்த நிலங்களை ஆங்காங்கு உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், உழுது பயிரிடக் கேட்டதற்கு அனுமதியில்லை. அவர்கள் அப்படி ஒன்றும் நிலம் வைத்திருப்பவர்களில்லை. ஜாதி ஹிந்துக்களுக்கு ஊழியம் செய்தே வாழ்கிறவர்கள்—அதற்காகவே பிறந்திருக்கிறோம் என்றும் எண்ணுபவர்கள். அனுமதியில்லல அரசாங்தாரால், கானலாக இருக்கும் இடத்தை கழனியாக மாற்ற. காரணம் ஆட்சேபகரமா

பசுத்தோல்போர்த்த புலிகளா?

(ஜப்பல்பூர் சீ. கோ. ஜெயராமுலு)

★

வயிற்றுவலி நீக்க வழக்கறிஞனிடமும், வாய்க்கால் வழக்குத்தீர்க்க வைத்தியனிடமும் செல்வோனைப் பற்றி வையகம் எப்படி நகைக்குமோ அத்

னதாம்.

எந்தப் புறம்போக்கு நிலங்களை அரசாங்கம், ஆட்சேபகரமானது என்றும், ஆற்றோரம் (படுகை) என்றும், ஏரிக்கரை ஓரம் என்றும் கூறி, மாஜி ராணுவஸ்தர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மறுக்கப்பட்டு வந்ததோ, அதே நிலங்களை ஆகஸ்டு தியாகிகளுக்கு அரசாங்கம் அளந்து போகிறது நூற்றுக்கணக்கான ஏக்கராக; அய்ந்து ஏக்கர் அல்ல.

பல ஊர்களில் இவ்விதம் நடந்திருக்கிறது. உதாரணமாக, சேலம் ஜில்லாவில், நாமக்கல் தாலூகாவில், மோகனூரிலிருந்து பாலப்பட்டி வரை அய்ந்து மைல் நிலத்திற்குக் காவிரியாற்றங்கரையிலுள்ள படுகைப்புறம் போக்கு நிலங்களை, அந்தப் பக்கத்திலுள்ள ஒரு ஆகஸ்டு தியாகிக்கு ஒதுக்கி விடப்பட்டிருக்கிறது என்றால், அரசாங்கத்தின் இழி செயலுக்கு வேறு என்ன எடுத்துக்காட்டு வேண்டும். இந்த அய்ந்து மைல் நீளத்தில் சுமார் நூற்றய்ம்பதுஏக்கர் நன்செய் கிராம மக்களால் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இவைகளைப் பிடுங்கி ஆகஸ்டு தியாகிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சாகுபடியாகாத நிலம் நூறு ஏக்கருக்கு மேல் இருக்கும். இவைகளும் அந்தத் தியாகிக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம். வனமாகக்கிடந்த ஆற்றங்கரையை வளமுள்ள கழனியாக்கிய மக்கள் ஏங்கிய முகத்துடன் அதைப் பார்த்துக் கொண்டுதான் போகிறார்கள். எதற்கோ சிறை சென்றவருக்குத் தியாகி என்ற பட்டம் கொடுத்து அவருக்காக மக்களின் உழைப்பைப் பறிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் நீதியும் நேர்மையும் எப்படியிருக்கிறது என்று பாருங்கள்.

தன்மைத்தாக இருக்கின்றது தமிழ்ப் புலமை பெறா அரசியல் வாதிகள் தமிழ் வளர்ச்சிக்கு என உழைப்பது.

சட்டம் பயின்ற ஜவஹரே விஞ்ஞான மாநாட்டுக்குத் தலைமைதாங்கும் போது, அரசியல் தலைவர்கள் மொழி வளர்ச்சிக்கு என உழைப்பதில் ஆச்சரியமே இல்லை.

இதையேன் எடுத்துரைக்கின்றேன் என்றால், சென்ற திங்கள் நடந்த தமிழ் வளர்ச்சி மாநாட்டின் நடவடிக்கைகளைக் காணும்போது நகைப்பு ஏற்படுகின்றது. நாட்டில் தமிழ்ப் புலவர்கள் மறைமலையடிகளும் திரு, வி. க. பாரதியார், போன்றவர்களும் தமிழ் வளர்ச்சிக்குத்தான் தொண்டாற்றுகின்றனரோ என்ற அய்யத்தை அவர்கள் ஏற்படுத்தி விட்டனர்.

தமிழ் மொழிப் புரட்சி கண்ட இந்தி எதிர்ப்புத் தலைவர் ஈ. வே. ரா. பெரியார் அவர்களைத் தள்ளாத வயதில் சிறைப்படுத்தி, கோடைமிகுந்த பல்லாரியில் வதக்கிய வங்கக் கவர்னர் ஆச்சாரியாரின் தரகுத்தாள் கல்கியார் அன்றோ, தமிழ்வளர்ச்சியுறத்தளராது உழைக்கின்றேன் என்கின்றார். அத்தாளில் அச்சிடப்பட்டுவரும் பகுதிகளிலே, குறிப்பாக ஷை மாநாட்டு நிகழ்ச்சிகளின் செய்திகளிலே தமிழ் மொழியின் மதிப்புச் சொல்லாகிய "திரு" எனும் அழகிய சொல்லை மறந்து (மறந்து அல்ல வேண்டும் என்றே மறைத்து) "ஸ்ரீ" எனும் வடமொழிச் சொல்லை வாரி இறைத்து வளர்ச்சி செய்கின்றார் தமிழை! இவர் தான் போகட்டும். இம்மாநாட்டுப் பேச்சுகளிலே, "வழிபாடு" எனும் தூய தமிழ்ச் சொல் இருக்க 'பூசை' எனும் தமிழ்ச் சொல் பூஜையாக மாற்றி வடமொழியினர் திருடிச் சென்றனராமே! என்னே இவர்கள் தம் தமிழ் வளர்ச்சியின் தளராத்தொண்டு. வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகின்றனரே என்று எண்ணும் போது இந்நாட்டினர்பால் ஏக்கம் பிறக்கின்றது. தமிழ் மொழின் பெருமை பேசித் தன்னலத்தைப் பெற வாசூழ்ச்சி செய்கின்றனர். தமிழ்வளர்ச்சியில் பற்று உடையவரானால் ஓமாந்தூரார் ஒன்று செய்ய வேண்டும். அவ்வொன்றும் இன்றே செய்ய வேண்டும். ஆச்சாரியாரால் சட்டமாக்கப்பட்ட 'ஸ்ரீ'யை ஒழித்து "திருவை" சட்டமியற்றல் வேண்டும்.

2. கல்வியமைச்சர் அவினாசியார் தாம் நடத்தும் 'இராம கிருஷ்ணா' மடத்தைக்கலைத்து "வள்ளுவர்" மடமாக்குதல் வேண்டும்.

3 கல்கியார் போன்றவர்களும் உண்மையாய் உள்ளன்புடன் தமது தவறுதலுக்கு வருந்தி, "ஏற்பது இகழ்ச்சி" என்பது தெரிந்து, கன்னித் தமிழ் மொழி இருக்க வடமொழி கலக்காமல் தமிழ்த் தொண்டு ஆற்றல் வேண்டும். அஃதன்றி ஆரியத்தையே புகுத்தப் பசுத்தோல் போர்த்த புலி போல் நடப்பது இனி நடவாது என்பதை இறுதியாக எச்சரிக்கின்றேன். இனியும் இதைச் செய்வாராயின் இந்நாட்டிலினி இடமில்லை என்பதைத்தான் மக்கள் வெளிப்படையாக எடுத்துரைக்க வேண்டும்.

திருந்திய திருமணம்.

சிறந்த வணிகரான உசிலம்பட்டித் தோழர் எஸ். பி. வடிவேல் அவர்கள் மகள் தோழியர் **இராசமணிக்கும்** சின்னமனூர்த் தோழர் எஸ். பி. அன்னைமுத்து அவர்கள் மகன் தோழர் **சுந்தர பாண்டியனுக்கும்** பேராவூரணித் தோழர் வி. எஸ். குழந்தை அவர்கள் தலைமையில் 6—2—48ம் நாள் உசிலம்பட்டியில் திருந்திய முறையில் திருமணம் நிகழ, தோழர்களான இராமலிங்கம், ஆசீர்வாதம் ஆகியோர் பாராட்டிப் பேசினர். இதன் நினைவாகக் குடிஅரசுக்கு அனுப்பிய ரூ. 1—0—0ம் வரப்பெற்றோம்.

இறுதிக்கடன்

கும்பகோணம் ரிடையர்டு அமீனா தோழர் டி. ரெங்கையா அவர்களின் தாயார் குப்பம்மாள் அவர்கள் தமது 95வது வயதில் மறைவடைந்தமையையொட்டி 7-2-48ம் நாள் தோழர் வி. கோவிந்தராசுலு பி. எ. எல். டி. தலைமையில் எவ்வகைச் சடங்குமின்றி இறுதிக்கடன் நடந்தது. தோழர்களான பாரதி தாசன், பாவலர், எஸ். கே. சாமி, திருநாவுக்கரசு, குஞ்சிதபாதம் ஆகியோர் இறுதிக்கடன் குறித்துப்பேசினார்கள். இதன் நினைவாக குடி அரசுக்கு அனுப்பிய ரூ. 1ம் வரப்பெற்றோம்.

மறைவு.

மதுரை நமது இயக்கத் தோழர் எஸ். கந்தசாமியவர்களின் தந்தையாரும், சிறந்த வணிகரும் மதுரை நகர சபைத் துணைத் தலைவருமான தோழர் ஆர். சண்முகம் அவர்கள் 28—1—48ம் நாள் இரவு தன் மனைவியையும் ஒரே மகனையும் பேரன் பேத்தியையும் பெரிதும் வருந்தச் செய்து மறைவு எய்தினார். அவரின் குடும்பத்தினருக்கு நம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மறைவின் நினைவாக குடிஅரசுக்கு அனுப்பிய ரூ 3—0—0ம் வரப்பெற்றோம்.

மதப் பேச்சும் மத நூல் விற்பனையும்,

ரோஜா முத்தையா

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சொன்னது, ரிஷிகள் கண்டு பிடித்தது என்று பலவாறு சொல்லுகிறார்கள். உபநிஷத்து, வேதத்தின் தத்துவ பாகம். அந்த உபநிஷத்துகளிலிருந்து "பிர்ம சூத்திர" மென்கிற ஒரு ஏட்டை வியாசர் செய்தார். அது வைதீக இந்துமதப் பிரிவுக்கெல்லாம் விஷேடப்பட்ட நூல். அதற்கு உரை சொன்ன சங்கரர், இராமானுஜர், மத்துவாச்சாரி, நீலகண்ட சிவாச்சாரி ஆகியோர் உரைகளே விஷேடமாகக் கொண்டாடப்படுகிறது. "பிர்ம சூத்திர பாஷிய" மென்றும் "வேத பாஷிய" மென்றும் அதற்குப் பெயர். நாலு உரையும் நாலு விதம். ஒன்றை ஒன்று மறுக்கிறது. கடவுளைப் பிர்மம், சிவம், விஷ்ணு, வாய்வு என்று நாலு பேரும் நாலு விதம் சொன்னார்கள். அதில் ஒன்று தானே சரியாக விருக்க முடியும். அந்தஸ்தில் நாலு பேரும் சமம், நாலு பேரும் தெய்வ அவதாரங்கள். கடவுளிடம் பேசிக் கொண்டிருந்தவர்களென்று, அவரவர்கள் சிஷ்யர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு கூட்டத்தை யுண்டுபண்ணி, அந்தக் கூட்டமும் சுகமாக வாழத் தாங்களும் சவுக்கிய மாகவிருந்தார்கள். ஆனால் அந்த நான்கில் கடவுள் எது என்பது தீர்மானமாகவில்லை; கண்டுபிடிக்கப்படவில்லை. என்றாலும் பிராமணன் ஒழிய மற்றெல்லாத் திராவிட ஜாதியும் பிராமணரின் தாசி மக்கள், வயிப்பாட்டி மக்கள், மடையர்கள், அடிமைகள் என்று கடவுள் சொன்னதாக நாலு பேரும் ஒன்று போலவே சொல்லியிருக்கிறார்கள். எல்லாப்பிராமணர்களும் சொல்லுகிறார்கள். அப்படியே நடத்துகிறார்கள். நாமும் அதைக் கேட்டு நடக்கிறோம், அவர்கள் காலில் விழுகிறோம்.

பஞ்சபூதச் சேர்க்கையே உலகம். அதற்குக் கர்த்தாவேண்டியதில்லை என்றான் ஒரு நாத்தீகன். பஞ்சபூதம் சேர்வதற்கும், மாறுவதற்கும், உலகம் தோற்றுவதற்கும் வேறு ஒரு சக்தி வேண்டும் என்றான் இன்னொரு நாத்தீகன். அதுதான் கடவுள் என்றான் பெரிய ஆத்தீகன். அதைக் கால் கை முளைத்த கடவுள் என்று ஏன் சொல்லுகிறாய்? இயற்கை என்று சொல் என்றான் பெரிய நாத்தீகன். அறிவு, ஞானம், இயற்கை, காலம் என்கிற வாதங்கள் இன்னும் நடந்து கொண்டேயிருக்கிறது. எப்படியிருந்தாலும் பெரியார் சொல்லுகிறபடி கடவுள், பெண்ஜாதி பிள்ளை வைப்பாட்டியுடன் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது என்பது உண்மை. தரகன், துபாஷி, லஞ்சம் முதலியன வேண்டியதுமில்லை. நாத்தீகன் பொய் சொல்லுவதில்லை. பார்க்காததைப்பார்த்ததாகவும் காணாததைக் கண்டதாகவும் ஆத்தீகன் பொய் சொல்லுகிறான். ஆத்தீகன் கூறும் பொய்யின் விசித்திரம் என்னவென்றால், காண முடியாததென்று தீர்மானமானதைக் காணலாமென்கிறான். பெரியவர்களெல்லாம் கண்டதாகச் சொல்லுகிறான். படித்த பண்டிதர்கள்கூடப் பக்கத்திலிருந்து பார்த்ததுபோல ஆமாம் என்கிறார்கள்.

பெரியார் நாத்தீகத்தைத்தான் சொல்லுகிறார். முதல் முதல் தேவ குருவான, பிரகஸ்பதி, கால சந்தர்ப்ப நிலைக்குத் தக்கபடி நாத்தீகத்தைத் தேவேந்திரனுக்கு உபதேசித்தார். நமது நாடும் நம் நிலையும் பார்த்து நம் பெரியார் நாத்தீகத்தைச் சொல்லுகிறார். தேவகுரு சொன்னமாதிரியில் பெரியார் சொல்லும் நாத்தீகம், கடவுள் உண்டென்றோ இல்லை என்றோ என்கிற விவகாரம் அதிலில்லை. இங்கிலீஷ் கல்வி நமக்கு உபயோகப்படவில்லை என்கிறார்கள். ஆங்கிலக் கல்விக்குத் தகுந்த வாகனம் நம்மிடமில்லாமையால் அது உபயோகப்படவில்லை என்று கவி தாகூர் சொன்னபடி, பெரியார் சொல்லுவதைச் சிந்திக்கும் எண்ணமுண்டாகாததினால்நமக்கு அது குற்றமாகப்படுகிறது. ஆத்தீகத்தால் பிழைப்பவர்களும், அதே ஜீவனமாக உடைய ஜாதிகளும், கூட்டமும், உண்மையை உணர்ந்தாலும் விரோதமே சொல்லுவார்கள். உலக போகத்திலும், விவகாரத்திலும் இருப்பவனுக்கும் கடவுள் வெகு தூரம். பல வழியில் சம்பாதித்த பெருளில் ஒரு சிறிதைக் கடவுளுக்காகச் செலவு செய்து பார்ப்பாரின் வயிற்றை நிறைத்தால் கடவுள் கடாட்சம் கை கூடுமென்பது அறிவீனம். "கடவுள் பக்தியும் செய்யலாம், உலக விவகாரங்களிலுமிருக்கலாம், அதுதான் கர்மயோகம். ஞானயோகத்திற்கும் பக்தியோகத்திற்கும் சமம். எல்லாவற்றிற்கும் பலன் ஒன்றுதான். கர்மயோகத்திலிருந்து அநேகர் கடவுளை அடைந்திருக்கிறார்கள். கிருஷ்ணன் ஒரு போகி, சுகர் ஒரு தியாகி, ஜனகன் ஒரு ராஜா, வசிஷ்டர் ஒரு கர்மகர்த்தா. எல்லோரும் ஞானத்தில் சமம்" என்கிற பல கதைகளும், கற்பனைகளும், சாஸ்திரங்களும் ஜீவனத்தின் தொழில் முறைக்காக எழுதி வைத்து ஏமாற்றுகிறவைகளாகும். "அருள் பழுத்த பராபரமே நிராசை இன்றேல் தெய்வமுளதோ" "ஆசை அற்ற விடம் சிவம்" "எல்லாவற்றையும் விட்டெறிந்து என்னைப் பின் தொடர்" என்கிற வார்த்தைகள்தான் மத முடிவு. இப்பொழுது நமக்கு உலக சுகம் வேண்டுமா? கடவுள் பாதம் வேண்டுமா? உண்மையில் எதை வேண்டி நிற்கிறோம். உலக சுகத்தை வேண்டியல்லவா? அதனால் கடவுள் கவலையை விட்டு, உன் கவலைக்குப் பாடுபடு என்றே பெரியார் சொல்லுகிறார். இதில் ஆத்தீக நாத்தீகமென்னவிருக்கிறது? இதில் தெய்வத்தின் பெயர் சொல்லி, மனிதனை மனிதன் அடிமை கொள்ளுவதும்; அதற்கு வழி செய்து வைத்திருக்கும் ஏமாற்றுவழிகளும் போகுமே ஒழிய, மற்றவர்களுக்கு யாதொரு தீமையுமில்லையே.

தெய்வலோகத்திற்குத் தேவகுரு வியாழ பகவான் போனார். மிதமிஞ்சிய போகத்தில் அழுந்திய தெய்வலோகத்தின் அக்கிரமத்தைக் கண்டார். அதைச் சரிப்படுத்தத் தேவேந்திரனுக்கு ஞானோபதேசம் செய்தார். அதைக் கேட்டுத் தேவேந்திரன் தவம் செய்யப் போய் விட்டான். அரசு இல்லாததால் தெய்வலோகம் நிலை குலைந்து விட்டது. தேவர்களெல்லாம் குருவிடம் போய் எங்கள் நாடு நிலை குலைந்து விட்டது. அரசாட்சியும் கட்டுப்பாடுமில்லாததால் எங்கள் சுக போகங்களையெல்லாம், அன்னியர்களான அசுரர்களும், இராட்சதர்களும் அபகரித்துக் கொள்ளுகிறார்கள். அந்தத் துன்பங்களைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டார்கள். குரு தேவேந்திரனிடம் போனார். தேவேந்திரா! சவுக்கியமா? என்றார். தாங்கள் உபதேசித்த ஞானத்தின் வழியே தவம் செய்து கொண்டிருக்கிறேன் என்றான் தேவேந்திரன். தேவராஜனே! நீ தப்பு செய்து விட்டாய். நான் சொன்னதின் அர்த்தத்தை நீ தவறாக அர்த்தம் செய்து கொண்டாய். கண்டதே காட்சி, உண்டதே சுகம், அனுபவித்ததே போகமென்ற உலகாயுத மதத்தை, முன் உபதேசித்த ஞானத்திற்கு அர்த்தம் சொல்லி உபதேசித்தார். தேவேந்திரன் தெய்வ லோகத்திற்கு வந்து அரசு நடத்தி அவனும் தேவர்களும் சுகமாயிருந்தார்கள். தேவேந்திரன் இருந்தானோ? குரு பிரகஸ்பதி இருந்தாரோ? ஆத்திகர்கள் கதை இது. ஏ அர்ச்சுனா! எது தாழ்கிறதோ? எது உயர்கிறதோ? அப்பொழுதெல்லாம் நான் அவதாரம் பண்ணிச் சமப்படுத்துகிறேன் என்று கிருஷ்ணன் சொன்னதும், ஒரு காலம் அரி படைப்பான், ஒரு காலம் அரன்

வீதியில் நடந்தால் விதித்திடு தண்டனை!

படைப்பான், ஒரு காலம் நான் படைப்பேன் என்று வதிஷ்டன் சொன்னதும், தேவேந்திரன் கதைக்குப் பொருத்தம். ஆத்திகர்கள் என்றால் அவர்கள் இதை நம்ப வேண்டும். தேவகுரு சொன்ன நாத்தீகத்தைத்தான் பெரியார் சொல்லுகிறார். சீரழிந்து கிடந்த தெய்வ லோகத்தை, தேவேந்திரனுக்கு நாத்தீகத்தைப் பிரகஸ்பதி உபதேசித்து எப்படிச் சீர்திருத்தினாரோ? அப்படியே அன்னியரால் அழுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, தாசிமக்களாக்கப்பட்டு, மானவுணர்ச்சி அற்று, பொதுக்கட்டில்லாதவர்களாய்ச், சாசுவதச் சிறுமையில் பிணிப்புண்டமனத்தினராய், ஒன்றிலும் அதிகாரமின்றிக் குறுகி, நமது வருங்காலத்தை மனுஸ்மிருதியில் சேர்க்கும் அன்னியரின் இச்சையை உணராமல் கீழே போய்க்கொண்டிருக்கும் நம்மவர்களை எல்லாம், ஒன்று சேர்க்க உண்மையை உணர்த்துவதே பெரியாரின் உழைப்பும் பேச்சும்.

எல்லா இந்து மதப் பிரிவுகளுக்கும் அஸ்திவார அனுப்பிரமாணமென்னும் தர்க்கீக மதமும், யோக மதமும், சாங்கிய மதமும், லோகாயுதமும் இந்து மதத்தைச் சேர்ந்ததுதான். உலகத்திற்கும் மனிதனுக்கும் உபயோகப்படாத தெய்வங்கள் அதிலிருக்காது. பொருளில்லாருக்கு இவ்வுலகமில்லை, அருளில்லாருக்கு அவ்வுலகமில்லை என்றவள்ளுவர்சொற்படிஅமைந்தவை

இரண்டாயிர வருடங்களுக்கு முன் பவுத்தர் என்பவர் பவுத்த மதத்தைச் சொன்னார். அந்த மதத்தைச் சனங்களுக்குச் சொல்லித் தானும் அந்த மதத்தைக் கைக்கொண்டு இந்தியா தேசத்தை அசோகச் சக்கரவர்த்தி என்பவர் ஆண்டு வந்தார். அவர் காலத்தில் நீதியும் நேர்மையும் ஒழுங்கும் தவறாமலிருந்தது. அசோக அரசர் அரசாட்சியில், எந்த ஆணும் பொய் சொன்னதில்லை. எந்தப் பெண்ணும் கற்பு நிலையை விட்டதில்லை என்று கிரீஸ் பண்டித யாத்திரீகன் எழுதி வைத்ததாக, சுவாமி விவேகானந்தர் தன் பிரசங்கத்தில் சொன்னார். அந்த அசோக சக்கரவத்தியின் நீதியின் அடையாளமான சக்கரம்தான் நமது தேசியக் கொடியில் போடப்பட்டிருக்கிறது. அந்தச் சக்கரத்தின் தன்மை நமது நாட்டில் நிலைக்கவேண்டுமென்பது நமது அறிவாளிகளின் எண்ணம். இராமர், தர்மர், விஷ்ணு, சுக்கிரீவன், அனுமார், தெண்டபாணி முதலியவர்களின் சக்கரங்களைத் தேசியக்கொடியில் போட முடியவில்லை. என்? இந்தச் சக்கரங்களும் அதன் சரித்திரங்களும் பொய்க் கற்பனைக் கதைகள். பாமர சனங்களைப் பிரித்து ஏமாற்றிப் பிழைக்க உண்டுபண்ணப்பட்டவைகள், அதனால் அறிவாளிகள் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். அதனால் உண்மையாக நீதியையும் நேர்மையையும் வளர்த்த அசோகச்சக்கரத்தைக்கொடியில் பறக்கவிட்டு அவர் பேரையும் சொல்லுகிறார்கள். அந்த அசோகர் யார்? பவுத்தரின் சிஷ்யர். பவுத்தக் கொள்கையை உலகமெல்லாம் பரப்பினவர். பவுத்த மதம், இந்துமத மென்கிற வைதீக மதத்திற்கு நேர் விரோதம். பிராமண மதத்திலுள்ள யாக, ஓம, எக்கியங்களை எல்லாம் கண்டித்தது. இந்துமதப் பிரிவுகளெல்லாம் பவுத்த மதத்தை நாத்தீக மதமென்று அன்று கூச்சல் போட்டது போலவே, இன்றும் கடவுள் இல்லை என்று சொல்லுகிற மதமென்று சொல்லுகின்றன என்றாலும், இன்றும் பெருவாரியானவர்கள் (60 கோடி மக்கள்) புத்த மதத்தராயிருக்கிறார்கள். இது உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கு. அந்த நாத்தீக மதச்சக்கரம்தான் இன்று நமது தேசியக் கொடியிலிருக்கிறது. சத்தியமும் நீதி நெறியும் போதிக்க வந்ததே மதம். நீதியும் நெறியும் நிலைத்து விட்டால், ஆசாடபூதி வேஷமும், அந்தரங்கப் புரட்டும் மக்களுக்குத் தேவையில்லை. இந்து மதத்தில் நீதியும் நெறியும் சொல்லப்பட்டிருந்தாலும், புரட்டும் பொய்யும் ஆசாடபூதி வேஷமும் வயிற்றுப் பிழைப்புமே கைச்சரக்காகவும், இருந்து வாழ்ந்து வருகிறது. மக்களை நீதிக்கு விடுவதில்லை. நேர்மையாய் நடக்க இடம் கொடுப்பதில்லை. இடம் கொடுத்தால் தங்கள் உயர்வு போய் விடுமென்று பிராமணன் நினைக்கிறான். மடாதிபதிகளும் லோக குருவும், வற்றவைத்துக் குடிக்கும் பாலும், பல்லக்குச் சவாரியும், படாடோபமும் போய் விடுமென்று நினைக்கிறார்கள். அர்ச்சகன், புரோகிதன் பிழைப்புப் போய்விடுமென்று நினைக்கிறான். பண்டிதன் சாஸ்திரிகளுக்கோ பகுத்தறிவில் பழக்கமில்லை. லோகப் பொதுவிதியை உல்லங்கனம் செய்து வந்த பணக்காரர்களோ, பார்ப்பானுக்கு எதற்கும் தட்சணை கொடுத்துவிட்டால்பரலோகம் கிடைத்து விட்டதாக நினைக்கிறார்கள். இப்படியிருந்தால் உண்மையும் நீதியும் இந்து மதத்தில் எப்படி விளங்கும்?

அதனால் அசோகச் சக்கரத்தின் நீதியையும், ஒழுங்கையும், நேர்மையையுமே பெரியார் உபதேசிக்கிறார். பவுத்தர் கண்டித்த வைதீக மதத்தைக் கண்டிக்கிறார். பவுத்தரை நாத்தீகர் என்று சொன்ன படி, பெரியாரையும் நாத்தீகர் என்று சொல்லுகிறார்கள். கடவுளை உன்னால் தெரிந்துகொள்ள முடியாது; தெரிந்துகொள்ளக்கூடாததுமாகும், உன் துக்கத்தைத்தெரிந்து கொள்! காரணங்களைக்கண்டு நடந்து கொள்! என்று பவுத்தர் சொன்னபடி பெரியாரும், கடவுளைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம்! உன் கவலையை நீ தெரிந்து கொள்! என்கிறார். தேவகுருவான பிரகஸ்பதி நாத்தீக மதத்தைச் சொன்னார். பவுத்தர் நாத்தீகராக்கப்பட்டார். அவர்கள் சொன்னதைத் தான் பெரியாரும் சொல்லுகிறார். இத்தனை காலம் பொறுத்து, இந்தியா தேசமெல்லாம் எப்படிப் பவுத்த சக்கரம் கொடியாகப் பறக்கிறதோ, அதுபோலவே வித்தியாசமில்லாத, எல்லோருக்கும் பொதுவான, பெரியார் கொள்கை என்றைக்கானாலும் திராவிடநாட்டிலும் நிலைக்கும். உலகத்திலும் நிலைக்கும்.

★

இதற்குப் பெயர் நேர்மையா?

1945ல் இந்தியச் சட்டசபைக்கு ஆட்களை நியமிக்கக் காங்கரஸ் கமிட்டியார் பார்லிமெண்டரி சப் கமிட்டி என்ற தேர்தல் போர்டை சென்னையில் நியமித்தார்கள். அதில் நமது மதிப்பிற்குரிய திரு. காமராஜ நாடார், பக்தவத்சல முதலியார், ஓமந்தூர் ரெட்டியார், ருக்மணி லட்சுமிபதி, அவினாசிலிங்கம் செட்டியார், கே. பாஷ்யம் அய்யங்கார் மற்றும் பலர் அங்கம் வகித்தார்கள். ஆனால் அவர்கள் தேர்ந்தெடுத்த நேர்மையையும் சொல்லுகின்றோம். திரு காமராஜ நாடார், எஸ். டி. ஆதித்த நாடார் அவர்களையும், பக்தவத்சலமுதலியார் வெள்ளியங்கிரி கவுண்டரையும், (முதலியார்) ஓமந்தூர் ரெட்டியார் வெங்கடசுப்பா ரெட்டியாரையும், ருக்மணி லட்சுமிபதி (பார்ப்பனர்) அம்முஸ்வாமிநாதனையும், (பார்ப்பனர்) கே. பாஷ்யம் அய்யங்கார் சடகோபாச்சாரியாரையும், அவினாசிலிங்கம் செட்டியார், ராமலிங்கம் செட்டியாரையும் மற்றும் ராதாபாய் சுப்பராயனையும் அவரவர்களுக்கு வேண்டியபடி தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

"பல்லவநாடு"

காங்கரசில் உள்ள சுமக்கின்ற ஜீவன்கள்!

கோவை அரசியல் மாநாட்டில் திரு. சி. பி. சுப்பையாவின் வரவேற்புரை மிக அருமையாகவும் பொருள் செறிந்ததாகவும் இருந்தது. அவர் தம்மையும் திரு. காமராஜரையும் பற்றிப் பேசுகையில், "காமராஜர் சத்தியமூர்த்தியின் குதிரை. அடியேன் ராஜாஜியின் குதிரை" என்று குறிப்பிட்டார். இதைக் கேட்டு என்பக்கத்திலிருந்தவர் "ஏறுகின்ற எசமானர்களும் சுமக்கின்ற ஜீவன்களும்தான் காங்கரஸிலிருக்கின்றன போலும்" என்று கோபத்தோடு கூறினார்.

"தமிழ் முரசு"

[2ம் பக்கத் தொடர்ச்சி]

குப்போ! சினிமாவுக்குப் போகாதே! என்றெல்லாம் நீங்கள் உபதேசம் செய்யாதீர்கள்!

குழந்தைகளுக்கு வேண்டியதையும் வேண்டாததையும் நிர்ணயம் செய்ய உங்களுக்கு உரிமையில்லை! குழந்தைகள்நிர்ணயம்செய்து கொள்ளட்டுமே! கோவிலுக்கும், நாடகமேடைக்கும், சினிமாவுக்கும் பரஸ்பரமுள்ள வித்தியாசமென்ன?

“வேண்டாம்! வேண்டாம்!! வேண்டாம்!!!”

அய்யோ! தொட்டில் முதல் சுடுகாடுவரை இந்த ‘வேண்டா’ப் பாட்டுதானா? குழந்தைகளுக்குச் சுதந்தரமில்லையா?

இவ்வாறு குழந்தை மனப்போக்குக்குக் முட்டுக்கட்டை போடுவதை நான் அறவே வெறுக்கிறேன்.

நீங்கள் என்னை அவிசுவாசி என்று இகழ்ந்தாலும் சரி; நிரீச்சுரவாதி என்று பழித்தாலும் சரி. குழந்தைகளை நான் ஒருபொழுதும் தடுக்கவே மாட்டேன்; சுயேச்சையாகவே விடுவேன். “என் தந்தை என்னை அடித்ததே இல்லை; துன்புறுத்தியதோ, திட்டியதோ இல்லை” என்று என் குழந்தைகள், என் அந்திய காலத்தில் கூறுவதையே நான் பெரிதாக மதிக்கிறேன்.

சிலநாட்களில் குழந்தைகள் விளையாடவே கூடாதாம். அவை புண்ணிய நாட்களாம்! நோன்பு நாட்களாம்! இது என்ன மடமை! எல்லா நாட்களும் ஒன்றுபோலவே இருக்கின்றன. நோன்பு நாட்களுக்கும் சாதாரண நாட்களுக்கும் வித்தியாசம் காணவில்லையே!

குழந்தைகளைமரத்தூண்களாக மதித்து நடத்த வேண்டாம். உயிருள்ள மரமாக மதித்து நடத்த வேண்டும். மரங்களுக்கு நீர் வேண்டும்; வெளிச்சம் வேண்டும்; வெப்பம் வேண்டும். அப்பொழுதுதான் செழிப்பாக வளரும். குழந்தைகளிடம் நேர்மையாகவும், கண்ணியமாகவும் நடவுங்கள். “உனக்குள்ள உரிமை குழந்தைகளுக்கும் உண்டு” இது என்றும் நினைவில் இருக்கட்டும்! குழந்தைகளுக்கும் சந்தர்ப்பம் கொடு! உன் கட்டளைகளுக்கு குழந்தைகள் எப்பொழுதும் கீழ்ப்படிய வேண்டுமென்று பிடிவாதம் செய்யாதே! குழந்தைகளைப் பொறுத்த வரையில் ஆண்டான் அடிமை மனப்பான்மையைத் தலைமுழுகி ஒழித்துவிடு!

தூக்கம் வரும்போது குழந்தைகள் தூங்கட்டும்! தூக்கம் வராத வேளையில் தொட்டிலில் போட்டுத் தூங்கும்படி கட்டாயப் படுத்தாதே!

இந்த விதிகள் பணக்காரருக்குத்தான் பொருந்தும்; ஏழைகளுக்குப் பொருந்ாது என்று பலர் சொல்லக்கூடும். சரி, ஏழைக் குழந்தைகள் அதிகாலையில் துயிலெழ வேண்டியது அவசியமானால் முத்தம் கொடுத்து எழுப்பலாமே! அடித்தா எழுப்ப வேண்டும்? குழந்தைகளுக்குச் சுதந்தரம் கொடுங்கள்! தம் சுயமரியாதையைக் குழந்தைகள் காப்பாற்றிக் கொள்ளட்டும்! பிரியமானதைக் குழந்தைகள் சாப்பிடட்டும்! குழந்தைகள் தேவை குழந்தைகளுக்கே தெரியும்! உணவு விஷயத்தில் ஆதிமுதல் கொண்டே குழந்தைகளுக்குச் சுதந்தரம் கொடுத்து விட்டால் வேண்டுவதையும் வேண்டாததையும் சுலபமாகப் பகுத்தறிந்து கொள்ளும். டாக்டர் உதவியே தேவையில்லாது ஆகிவிடும். வைத்திய சாஸ்திரம் முன்னேற்றமடைந்திருப்பதற்கு நோயாளிகளின் துணிச்சலே காரணம்; வைத்தியர்களின் புத்திசாலித்தனமல்ல. சுர நோயாளி தண்ணீர் குடிக்கக் கூடாதென்று பல்லாயிர வருஷமாக வைத்தியர்கள் தடுத்து வந்தார்கள். அவர்கள் தண்ணீரை விஷமாக மதித்தார்கள். சில நோயாளிகளுக்குத் துணிச்சல் உண்டாயிற்று. தாகம் தாங்கமுடியவில்லை. செத்துப் போனாலும் சரி என்று தண்ணீர் குடித்தார்கள். தண்ணீர் குடித்ததும் சுரம் தணிந்து விட்டது. இதையறிந்தபோது வைத்தியர்கள் வியப்படைந்தார்கள். “உன் உடம்பு கல்லுடம்பு; அதனாலேயே பிழைத்திருக்கிறாய். சாமானியர் செத்தே போயிருப்பர்” என்று சமாதானமும் கூறினர். ஆனால் நோயாளி மதிக்கவேயில்லை. தேவையான மட்டும் தண்ணீர் குடித்தான்; குணமடைந்தான். கடைசியில் வைத்தியர்களே கீழ்ப்படிந்தார்கள் “சுரத்துக்குத் தண்ணீர் சிறந்த அவ்ஷதம்” என நற்சாட்சிப் பத்திரமும் வழங்கலானார்கள்.

குழந்தைகளுக்குச் சுதந்தரம் கொடுத்துவிடு! கொடுத்தால் நீ செய்வதையே அவர்கள் செய்வார்கள்! அம்மட்டோ! எப்பொழுதும் சரியானதையே செய்வார்கள்! கட்டுப்பாட்டை எதிர்க்கும் திவ்ய சக்தி மக்கள் உள்ளத்தில் இயல்பாகவே அமைந்திருக்கிறது! மக்களுக்கு அத்தகைய மனப்பான்மை அமைந்திருப்பது மிகவும் விசேஷமாகும்! ஆயிரம் வருஷங்களுக்குமுன் வாழ்ந்தவர்கள் வைத்தியர்கள் உபதேசப்படி நடந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் தெரியுமா? மக்கள் எல்லாம் செத்தே போயிருப்பார்கள். மத குருமார் கட்டளைப்படி மக்கள் நடந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? அறிவு விருத்தியடைந்திருக்காது. மக்கள் எல்லாம் மூடர்களாகவே இருந்திருப்பார்கள். கட்டளையை மீறிச் சுயமாகச் சிந்திக்க— செயலாற்றத் துணிச்சலுடைய சிலர் ஒவ்வொரு காலத்தும் இருந்ததினாலேயே உலகம் தற்காலத்திய உன்னத நிலையை அடைந்திருக்கிறது.

ஒலம்பியாவில் ‘ரோபோ காட்சி’

இவ்வருட கோடைக் காலத்தில் லண்டனிலுள்ள ஒலம்பியாவில் பிரமாண்டமானதொரு ‘ரோபோ’ (எஃகு மனிதர்கள்) பொருட் காட்சி நடைபெறவிருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்காக நடைபெறும் போரில் பயன் படுத்தப்படும் சாதனங்களை வெளிநாட்டு வணிகர்களுக்கும் பொது மக்களுக்கும் காண்பிக்கவே இப்பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுமார் இரண்டுவார காலம்வரை நீடித்திருக்கப் போகும் இக்காட்சியில், இயந்திர சாதனங்களும் மனிதனுடைய சக்திக்குச் செலவில்லாமல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் பூதாகாரமான மெஷீன்களும், ஆகாய ஏணிகளும், பளுதூக்கிகளும், கரி அள்ளும் இயந்திரங்களும் இடம் பெறும். இப்பொருட்காட்சியில் சுமார் 100 தொழிற் ஸ்தாபனங்கள் கலந்து கொள்ளுமெனக் கூறப்படுகிறது.

மதத் தலைவரா? காமத் தலைவரா?

ஈரானில், முஸ்லிம் பெண்கள் “பர்தா” அணியாமல் வெளியே வரக்கூடாது என்று பெரிய சர்ச்சை நடக்கிறது. சிலர் இது வெளிநாட்டாரின் தூண்டுதலால் கிளப்பி விடப்பட்ட மத வெறியர்களின் கூச்சல் என்கின்றனர். பெண்களின் மணிக்கட்டும், கணுக்கையும், கணுக்காலும், கண்ணுக்குத் தெரிந்தால் சில ஆடவருக்குக் ‘காம உணர்ச்சி’ மேலிடுவதாகவும், அதை அடக்க முடிவதில்லை என்றும் ஒரு பெரிய மதத்தலைவர் புகார்செய்கிறார்.

எங்கள் தீர்ப்பு

தமிழின் உயிர் நாடி.
அல்லது
படிப்பதெப்படி?

விலை ரூ. 1—4—0

தமிழின் உயிர் நாடி என ஆசிரியர் கருதிய செய்யுட்கலை முதலாக மெய்ஞ்ஞானக்கலை ஈறாக (64 கலைகள் அல்ல) 18 கலைகளைக் குறித்துத்தாம் தமிழ் நூல்களில் படித்தறிந்தவை, சிந்தித்து அறிந்தவை ஆகியவற்றைச் சேர்த்து விளக்கி அவைகளை எவ்வெவ் முறையில் நின்று படிக்க வேண்டும் என்று கூறுகிறார். இவ்விருபதாம் நூற்றாண்டில் உலகின் பிறபாகங்களில் பெருகி வளர்ந்திருக்கும் கலைகளின் நிலையோடு ஒப்பிடும்போது எப்படி விஞ்ஞானக் கலை நம் நாட்டிலும் எட்டிலும் பெருகவில்லையோ அதைப் போலவே ஆசிரியர் கூறும் 18 கலைகளைப் பற்றிய அறிவைப் புகட்டும் ஏடுகள்கூட நம் நாட்டில் விளக்கம் பெறவில்லை. ஆசிரியரின் கலைகளைப் பற்றிய கருத்து விளக்கங்கள் அனைத்தும் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தக்கன என்று நாம் கூறத் துணியவில்லையாயினும், சிந்தனைக்கு விருந்தான வாழ்விற்குப் பயனுள்ளதான சில கருத்துகள் இடம் பெற்றிருக்கின்றன எனத் துணிந்து கூறலாம். கலைகளைப் பற்றி ஆய்ந்து கூறும் தனித்தனி நூல்கள் பற்பலவாக வளரவேண்டும். அதற்கு இந்த நூல் ஒரு ஆரம்பம்-வழி வகுத்திருக்கிறது. இக்கலைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோர், அவசியம் இந்த நூலைப் படித்தறிதல் வேண்டும்.

வள்ளுவர் வகுத்த
நம் நாட்டுச் சட்டங்கள்.

விலை அணா 0—4—0.

பிள்ளையார் சுழியும் ஆதிபகவன் துணையையும் பெற்று, வள்ளுவர் கூறிய வாய்மொழிகளுள் 79க்கு மட்டும் ஆசிரியர் கருத்துரை வழங்கி, அவற்றை இந்நூலில் வெளியிட்டிருக்கிறார்.

திருவள்ளுவர்
குழந்தையுள்ளம்.

விலை அணா 0—2—0.

இச்சிறிய நூல் குழந்தைகளின் உள்ளத்திலேயே திருவள்ளுவர் கூறிய அறிவுரைகள் பதிய வேண்டுமென்ற அவாவினால் தொகுக்கப் பெற்றிருக்கிறது. திருவள்ளுவரின் குழந்தை உள்ளம் என்ற தலைப்பிற்குப் பொருத்தமாக உள்ளுறை அமையவில்லை.

இம்மூன்றின் ஆசிரியர் தோழர் ஆர். கெ. அரங்கசாமியவர்கள். எப்பொழுதும் எதற்கும் எங்கும் திருக்குறளைக் கையாளலாம்- கையாள வேண்டும் என்ற பெருவிருப்பமுடையவர் என்று இந்நூல்கள் அவரை அறிவிக்கின்றன. இவை கிடைக்குமிடம்:-

திருக்குறள் பதிப்பகம்.
இராசிபுரம் போஸ்டு. சேலம் ஜில்லா.

கார்ல் மார்க்ஸ்.

விலை ஒரு ரூபாய். ஆசிரியர்: எஸ். சதாசிவம், இன்ப வாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம். கோவை.

பழங்கணக்கை மாற்றி ஒழித்துப் புதுக்கணக்குப்போட வழி வகுத்த முதல் அறிஞன் கார்ல் மார்க்ஸ். உலகம் இன்ப வாழ்வு வாழவேண்டுமானால், மக்கள் வாழ்வில் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளையும் சேர்த்துக் கணக்கிட்டு, சிக்கலைப் போக்கிச் சீர்பெறும் வழியைக்காண வேண்டும் என்ற பேரறிஞன் கார்ல் மார்க்ஸ். அவன் சென்ற வழி அனைவருக்கும் நல்ல இன்பவழி. இதை இன்றைய ரஷ்யா எக்காளமிட்டுக் கூறுகிறது. இவனையறிய எவரே ஆசைப்படார்? இவனே யறிவது என்றால் இவன் பிறந்து வாழ்ந்த வாழ்க்கையை மட்டும் அறிந்தால் போதுமா? அவன் வாழ்க்கையில் அவன் கண்ட தத்துவங்கள் தானே நமக்கு முக்கியம். அப்பணியை அழகாக நிறைவேற்றியிருக்கிறார் தோழர் சதாசிவம். இன்னும் விரிவாக, விளக்கமாக அவரால் தந்திருக்க முடியும்; ஆனால் மிகக்குறைந்த பக்கங்களில் இதை எதிர்பார்க்க முடியாதல்லவா? எக்கட்சியினராயினும் விரும்பிப் படிப்பதற்குரிய—படிக்க வேண்டிய ஒரு நூலே இது என்பது நம் கருத்து:

தனி அரசு

ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத் தம்பி. தனி இதழ் 0-4-0 ஆண்டுக்குரூ.3-0-0 விருது நகர்.

திராவிடத் "தனி அரசு" ஏற்பட எல்லா வழியிலும் முன் நின்று உழைக்கும் மாத இதழ் தனிஅரசு. "விசர்ஸ்" நாட்டு நடப்பும் நமது நிருபர் "பருந்து"ம் குறிப்பிடத் தகுந்த பகுதிகள். எண்ணத்திற்கும் செயலுக்கும் எழுச்சியை யூட்டவல்ல கதைகளும், கவிதையும் இம் முதலிதழை அலங்கரிக்கின்றன. ஆசிரியர் ஆசைத்தம்பி அவர்கள் இம் முதல் முயற்சியிலேயே அடைந்த வெற்றி மிகவும் பாராட்டுதற்குரியது.

மனசக்தி

(மாதப்பத்திரிகை)

விலை அணா 0-8-0 மானேஜர் 48, மேலகாசிப்பாளையம், திருச்சி.

உலக மக்களை, தெய்வீகத் துறையிலும் சன்மார்க்கத் துறையிலும் அழைத்து, சகோதரஉணர்ச்சியையும் மித்ர பந்தத்தையும் ஏற்படுத்தப்பாடுபட்டு, துர்வாழ்வில் காலங் கழிக்கும் முஸ்லிம்களை இஸ்லாமியா விதிகளின் பால் அழைக்கச் சேவை செய்து, சன்மார்க்க இயக்கத்தை லட்சியமாகக் கொண்டு நடத்தப்படுவது இந்த மனசக்தி. திராவிடனுக்குப் புரியாத—பயன் தராத சமஸ்கிருதம் திராவிட நாட்டில் மதிப்புப் பெறும்போது, நாங்கள் ஏன் மதிப்புப் பெறக்கூடாது என்று கேட்கின்றன, இதில் நிரம்பக் காணப்படும் உருது சொற்கள். முஸ்லிம் நலனை முஸ்லிம்களிடைய வளர்ப்பதற்குப் பயன்படட்டும்! ஆனால் மதவெறியை ஊட்டாதிருக்கவேண்டும்.

எங்களிடம் கிடைக்கும் நூல்கள்.

கவிஞர் பாரதிதாசன்.

பாரதிதாசன் கவிதைகள்	3	8	0
பாண்டியன் பரிசு	3	8	0
கற்கண்டு	2	0	0
எதிர்பாராத முத்தம்	1	4	0
சௌமியன்	1	4	0
அழகின் சிரிப்பு	1	0	0
நல்லதீர்ப்பு	0	10	0
தமிழ் இயக்கம்	1	0	0
காதல் நினைவுகள்	0	12	0
குடும்பவிளக்கு I	0	10	0
,, II	0	6	0
இசையமுது	0	12	0
அமைதி	0	8	0
இரணியன் அல்லது இணையற்ற வீரன்	0	8	0

அறிஞர் அண்ணாதுரை.

ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
குமரிக்கோட்டம்	1	0	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
விடுதலைப்போர்	1	0	0
கற்பனைச்சித்திரம்	1	0	0
சிறு கதைகள்	1	0	0
திராவிடர் நிலை	0	6	0
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8	0
ஆரியமாயை	1	0	0
நல்ல தீர்ப்பு	0	4	0
நாடும் ஏடும்	0	6	0
மே தினமும் திராவிடர் கழகமும்	0	5	0

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.